## புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலையம்.

பிரசுரம்]   1941-ம் ௵ மார்ச்சு ௴ 15௳   [ந. 35.

பிரஸங்கம் XXXV.

## அயர் அல்லது அயர்லாந்து.

### படையெடுப்பிலிருந்து கிராட்டன் வரை (1172—1788).

பிரிட்டனுக்கு அணித்திருப்பதானது அயர்லாந்தின் சரித்திரத்தை மிகவும் பாதித்திருக்கிறது. இந்த சாமீப்யம் தான் அதன் பண்டை சரித்திரத்திற்குத் திறவுகோல்; எதிர் காலத்திற்கும் அஃதே.

கெல்ட் ஜாதியாரின் குணவிசேஷங்களாவன:—உயிரைப் பொருட்படுத்தாத ஒரு தைரியம், செட்டின்மை, ஒற்றுமையின்மை, கலாவிலாசங்களில்—முக்கியமாக சங்கீதம், செய்யுள்—குதூகலம், பாரமார்த்திக விஷயங்களில் பற்றுதல், ஆழ்ந்த தெய்வபக்தி, ஹாஸ்யராஸிக்யம். ஆனால், இவைகளுடன் உலகப்போக்கின் அடிப்படைகளில் சரியான உணர்ச்சியும் பிடிப்பும் இன்மை. சற்றேறக்குறைய, இங்கும் அங்கும் சில விலக்குகள் எதிரிடைகளுடன், இவைகளே இன்றைய அயரிஷாரின் குணவிசேஷங்கள்.

சுமார் 2,000 வருஷங்களுக்குமுன் ஸ்காட்ஸ் என்ற ஒரு வகுப்பினரால் பரவப்பட்டது. அவர்கள் கெல்ட் ஜாதியாரைச் சேர்ந்த கேல்கள் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த ஸ்காட்ஸ் பின்பு ஸ்காட்லாந்தின் மலைப்பிரதேசங்களில் பரவி அத்தேசத்திற்கே தங்கள் பெயரை இட்டார்கள். ஐரிஷார் அயர்லாந்தின் மதகுருவாகிய சாந்த் பாட்ரிக்கால் கிருஸ்தவ மதத்தில் சேர்க்கப்பட்டார்கள்.

அந்த காட்டிமிராண்டி நாட்களில் ஐரிஷ் சர்ச்சானது படிப்பிற்கும் பக்திக்கும் ஒரு உதாரணமாக விளங்கியது. ஆனால், ராஜரீகமாக சுமார் 600 வருஷங்கள் வரை எங்கும் குழப்பம்தான். அத்தேசத்து அரசர்கள் ஒருவரோடு ஒருவர் கில்கின்னி காட்டுப்பூனைகளைப்போல பூசலிட்டார்கள். பன்னிரண்டாவது நூற்றாண்டில் சிற்றரசன் ஒருவன் இங்கிலாந்து அரசன் இரண்டாவது ஹென்ரியை ஒத்தாசைக்கு அழைத்தான். ஹென்ரியும் தன்னைச் சுற்றியிருந்த யுத்தத்தினை உள்ள சில முரட்டு பிரபுக்களை அயர்லாந்திற்கு போய் எவர் கக்ஷியிலும் சேர்ந்து சண்டை போட்டு அங்கேயே குடியேற அனுமதித்தான். 1172-ல் அவர்கள் அவ்வாறே செய்தனர். அது முதல் ஆங்கில அரசர்கள் அயர்லாந்தின்மீது ஆதிக்கம் கொண்டாடினார்கள். அயர்லாந்தின் கிழக்கித்திய கடலோரம் இங்கிலீஷாரால் பிரித்து கோட்டைகள் மூலம் காபந்துசெய்யப்பட்டது. அதன் பெயர் "பேல்". அங்குதான் இங்கிலாத்திற்கு செலாவணி. டியூடர் அரசர்கள் இங்கிலாந்தில் பலமும் செல்வாக்கும் உள்ளவர்களாக இருந்தார்கள். அதனால் தங்கள் ஆதிக்கத்தை அயர்லாந்து மீது செலுத்த ஆரம்பித்தார்கள். பாயினிங்ஸ் சட்டங்கள் மூலம் இங்கிலீஷ் பார்லிமெண்ட் அயர்லாந்தின் தீவுமீதும் தன் அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்தது.

தென் அயர்லாந்து அன்றும் இன்றும் கத்தோலிக் மதப்பற்றுள்ளது. இங்கிலாந்தில் ஏற்பட்ட பிராடஸ்டண்ட் சீர்திருத்தத்தை அயர்லாந்திலும் பலாத்காரமாக புகவிட முயற்ச்சித்ததில் இரண்டு நாட்டாருக்கும் விரோதம் ஏற்பட்டது. இங்கிலாந்து சரித்திரத்தில் ராணி எலிஸபெத்தின் ஆட்சி மிக்க ஒளிபொருந்தியது. ஆயினும், அயர்லாந்து சரித்திர ரீதியாக அதன் துக்க சரித்திரத்திற்கு அதுதான் ஆரம்பம். அவள் அயர்லாந்தில் ஆங்கில பிராடஸ்டண்டு சர்ச்சை பலாத்காரமாக ஸ்தாபித்தாள். தேசத்தில் பெரும் நிலப்பகுதிகளை ஸ்வான்தார்களிடமிருந்து பிடுங்கி, நிரந்தர ஆங்கிலமேல்பார்வை இருப்பதற்காக, அவற்றை ஆங்கிலேயருக்குக் கொடுத்தாள். ராணி எலிஸபெத்தின் மந்திரியாகிய லார்ட் பர்லி இதைப்பற்றி "ஐரிஷார் ஆங்கிலேயரின் கொடுங்கோன்மையைப்பற்றி ஆட்சேபிக்க இடமிருப்பதுபோல் ஸ்பானியர்களின் கொடுங்கோன்மையைப்பற்றி ஆட்சேபிக்க குப்ளனிங்குகளுக்குக்கூட அவ்வளவு ஆதாரமில்லை," என்று கண்டித்தான். இம்முறைகளால் பயன் ஏற்படவில்லை. அயர்லாந்து கீழ்ப்படியவில்லை. ஐம்பது வருஷங்களுக்கு பிறகு இங்கிலாந்தின் பாதுகாப்பிற்காக பொதுப்படைகளை அனுப்பவேண்டியிருந்தது.

ஏற்கனவே ஏற்பட்ட பிரச்னைகள் கிராம்வெல் காலத்தில் அவனுடைய நடவடிக்கைகளால் விரிவும் ஆளவும் அடைந்தன. அவன் அயர்லாந்தை படையெடுத்து அதன் சைனியங்களை தோற்கடித்து, தேச மக்களின் நிலங்களை பிடுங்கி, அவற்றிலிருந்து ஜனங்களை துரத்தினான். இங்கிலாந்தின் ஸ்டுவேர்ட் வம்ச மீட்ச்சிக்குப் பிறகு கதோலிக் அயர்லாந்து மறுபடியும் தலையெடுக்க ஆரம்பித்தது. ஆனால், கதோலிக் சர்ச்சைச் சேர்ந்த ஜேம்ஸ் II, வில்லியம் III (ஆரஞ்சு)-ஆல் பாயின் யுத்தத்தில் (1688) முறியடிக்கப்பட்டபொழுது,

அயர்லாந்தின் கதோலிக் ஸ்வப்பனங்களும் அழிந்தன. அது மீண்டும் பிராடஸ்டெண்ட் நுகத்தடியின்கீழ் வந்தது. தலைநகராகிய டப்ளினில் பேருக்கு ஒரு பார்லிமெண்டு இருந்தது. ஆயினும், கதோலிக்குகளுக்கு தங்கள் தாய்நாட்டில் எல்லாவிதங்களிலும் உரிமைப்பரிகரிப்பு ஏற்பட்டிருந்தது; அவர்கள் வோட் செய்யக்கூடாது; அபேட்சகர்களாக நிற்கக்கூடாது; உத்தியோகம் வகிக்கக் கூடாது. ஆனதால் பெரும்பான்மையோராகிய கதோலிக்குகளை அடக்கி தொந்தரவு செய்ய சிறுபான்மையோராகிய பிராடஸ்டண்டுகள் கையில் பார்லிமெண்டு ஒரு கருவியாக உபயோகப்பட்டது. அந்த இரண்டு நாட்களில் ஐரிஷ் தேசத்தார் அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இவைகளில் அமுக்குண்டு தேய்ந்து, நலிந்து கிடந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு நடுநாயகமாக நின்று, அவர்களை ஒற்றுமைப்படுத்தி ஆதரவு அளித்தது ஒன்றே ஒன்றுதான்,—அது அவர்களுடைய கத்தோலிக் சர்ச்.

## ஹென்ரி கிராட்டன்.

1775—1788-வரை நடந்த அமெரிக்கன் சுதந்திரப்போர் ஐரிஷாரின் அவிந்துபோன தேசிய ஆர்வத்தை மீண்டும் மூட்டியது. அவர்கள் அணிவகுத்து ஆயுதம் தாங்க அவர்களுக்கு அவகாசம் கொடுத்தது. அயர்லாந்து சொற்பொழிவாளர்களுள் ஹென்ரி கிராட்டன் முதன்மையானவர். அவர் டப்ளின் பார்லிமெண்டில் இங்கிலாந்து பார்லிமெண்டிற்கும் அதற்கும் தொடர்பு அற்று விட்டதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். இதை இங்கிலீஷ் கவர்ன்மெண்ட் அங்கீகரிக்க வேண்டிவந்தது. 1793-ல் வோட் உரிமைபெற்ற கதோலிக்குகளுடன் ஒரு சுதந்திர அயரிஷ் பார்லிமெண்ட்—கிராட்டன் பார்லிமெண்ட் என்று அதன் பெயர்—ஏற்பட்டது. கிராட்டன் கொள்கைகளுள் குறிக்கத் தக்கது; "பிரிடனுக்தும் அயர்லாந்துக்தும் உள்ள பரஸ்பர தொடர்பு நிலைத்திருக்க வேண்டுமென்பதும் யுத்த காலத்தில் அயர்லாந்து பிரிடனுக்கு சந்தேகம் அன்னியில் மனப்பூர்வமான உதவி அளிக்கவேண்டுமென்பதும் அவனுடைய உறுதியான கோள்கை."

## பிரெஞ்சு புரட்சி.

சீக்கிர உற்சாகிகளாகிய ஐரிஷாரைக் கிளப்பிவிட்ட அடுத்த வெளி நிகழ்ச்சி பிரெஞ்சுப்புரட்சி (1788). அயர்லாந்தில அதனுல் ஒரு அமிதவாத கட்சி—'ஐக்கிய ஐரிஷ் கட்சி' நிருவப்பட்டது. பிரதம மந்திரி பிட்லார்ட், பிட்ஸ் வில்லியம் என்பவரை அயர்லாந்துக்கு வைஸ்ராயாக அனுப்பினர். அவர் ஐரிஷாரிடம் ஆங்கில கவர்ன்மெண்டு கதோலிக்கர்களுக்கு பூர்ண உரிமைகள் அளிக்கப்போவதாகவும், அவர்களை லண்டனிலுள்ள பிரிடிஷ் பார்லிமெண்டில் அங்கத்தினராக அனுமதிக்கப்போவதாகவும் முன் ஜாக்கிரதையன்னியில் வெளியிட்டார்: இதனுல் ஐரிஷாரின் ஆசைகள் வளர்ந்தன; அவர்கள் விரோதிகளின் குரோதமும் வளர்ந்தது. இதனிடையே வைஸ்ராய் வேலையை விட்டு நீக்கப்பட்டார். 'பிட்ஸ் வில்லியத்தின் கோரிக்கையும் அவரை பின்பு வேலையிலிருந்து நீக்கியதும் ஐரிஷ் சரித்திரத்தில் ஒருசோககரமான முடுக்கு.' ஐக்ய ஐரிஷார் சங்கம் ரகசியமாக வேலை செய்யும் பயங்கர இயக்கத்தை மேற்கொண்டது. அதன்

மூலம் பிரிடனையும் அயர்லாந்தையும் அறவே பிரிக்கமுயன்றது. இதற்குப் போட்டியாக அமிதவாத பிராடஸ்டெண்டுகள் 'ஆரஞ்சுமென்' சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இவ்விரு பிளவுகளும் அயர்லாந்தில் அன்று முதல் ஊன்றி விட்டன.

## பிட்டும் 1800-வருஷத்திய பிணைப்புச் சட்டமும்.

நெபோலியனுடன் பிட் போராடினார். அப்பொழுது அயர்லாந்தில் தனி பார்லிமெண்டால் பிரிடனுக்கு ஆபத்து விளையுமென்று அவர் பயந்தார். ஸ்காத்லாந்து பார்லிமெண்டை இங்கிலாந்து பார்லிமெண்டுடன் ஒன்றுபடுத்தியதால், அத்தேச பிரச்னை தீர்ந்தது. அதேபோல், அயர்லாந்து பார்லிமெண்டையும் இங்கிலாந்து பார்லிமெண்டையும் ஒன்றுபடுத்தினால், கதோலிக்கு உரிமையளிப்புடன், ஐரிஷ் பிரச்னை முடிவாக தீரும் என்று அவர் எதிர்பார்த்தார். ஐரிஷ் பார்லிமெண்டு 1800-ல் மிக்க சாம தான பேத லஞ்சங்களின் மூலம் தான் முடிவடையவும் இங்கிலாந்துடன் ஒன்றுபடவும் சம்மதித்தது. பிட்டின் ராஜ நிபுண ஆசைகள் கட்டாயம் நிறைவேறியிருக்கும். அமெரிக்கா விஷயத்தில் போல அயர்லாந்து விஷயத்திலும் ஜார்ஜ் III குறுக்கே நின்றார். "நான் பிராடஸ்டெண்ட் மதத்தை ஆதரிக்க அபிஷேக காலத்தில் சத்தியம் செய்தேன்; கதோலிக்குகளுக்கு உரிமைகள் அளித்தால் என் சத்தியத்திலிருந்து வழுவினவனாவேன்," என்றார். பிட் வருந்தி தன் வேலையை ராஜீநாமா செய்தார். அயர்லாந்து சரித்திரத்தில், போனால் வராத மற்றோர் பிரமேயம் நழுவியது.

## ஸ்காத்லாந்தும் அயர்லாந்தும்.

1707-ல் இங்கிலாந்தும் ஸ்காத்லாந்தும் ஐக்கியப்பட்டன, அப்பொழுது 1800-ல் இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் எத்தனை ஒத்துமையோ (வாஸ்தவத்தில் ஒத்துமைக்குறைவோ) அவ்வளவே இரண்டு தேசங்களுக்கும் இடையே இருந்தது. ஆயினும் முன்னது இரண்டுகளுக்கும் இடையே பொது மதம், பொது நலன்கள் நிஜ ஐக்கியபத்தியத்தை உண்டுபண்ணின. அயர்லாந்து விஷயத்திலோ, மதம், பொருளாதாரம், இங்கிலாந்தின் கற்பனையின்மை அனுதாபமின்மை—இவைகள் பிளவுகளை வளர்த்தன. ஐக்கியச்சட்டத்தின் பலன் இது—காமன்ஸ் சபையில் ஐரிஷ் கட்சிக்கு ஒரு சௌகரியம் ஏற்பட்டது. இங்கிலாந்தின் இரு கட்சிகள்—கன்ஸர்வேடிவ், லிபரல்—இடையே தூக்கும் திராசு முனையில் ஐரிஷ் கட்சி அமர்ந்தது. அது தன் இஷ்டப்படி ஒரு சமயம் ஒரு கட்சியையும் மற்றொரு சமயம் மற்றொரு கட்சியையும் முறையே தூக்கவும் அமுக்கவும் செய்தது. அதனால் மந்திரி சபைகள் ஏற்பட்டன; அதனால் அழிந்தன. லார்டு ஸாலிஸ்பரி ஒரு சமயம் வயற்றெரிச்சலுடன் "சில சமயங்களில் இங்கிலாத்தின் அரசியல் அயர்லாந்தாக முடிந்திருக்கிறது" என்றார்.

## அயர்லாந்தின் மூன்று பிரச்னைகள்.

டிஸராலி 'அயர்லாந்தின் மூன்று பிரச்னைகள், (1) வயிறுகாயும் ஜனங்கள், (2) அந்நிய மத சர்ச், (3) வெளி நாட்டு மிராசுதார்' என்று சுருக்கச்சொன்னார்.

19-வது நூற்றாண்டில் அயர்லாந்தின் சரித்திரம் ஆங்கில ராஜ தந்திரிகள் இம் மூன்று பிரச்னைகளைத்தீர்க்கச் செய்த முயற்சிகளைப்பற்றியது.

## டானியல் ஓ' கானல்.

அடுத்த ஐரிஷ் பெரியார் டானியல் ஓ' கானல். லட்சக்கணக்கான அவருடைய கொந்தளிக்கும் தேசத்தாரை அவர் தன் சொற்பொழிவால் சிரிக்கவும், அழவும், வெறிபிடிக்கவும், அடக்கவும் வல்லமை வாய்ந்தவர். "அவருடைய அபாய செல்வாக்கு எப்பொழுதும் சட்ட ரீதியான கிளர்ச்சிவழிகளில்தான் உபயோகப் படுத்தப்பட்டது. நில சம்பந்தமாக ஐரிஷாரின் பயங்கரச்செய்கைகளை அவர் கண்டித்தார். ஆயுத எதிர்ப்பை அவர் அறவே வெறுத்தார். அவருடைய ராஜ விசுவாசம் ஆழ்ந்தது. அதிலும் விக்டோரியா ராணியாரிடம் அவருடைய விசுவாசம் அபரிமிதம்." கதோலிக் சங்கத்தைத் தன் கிளர்ச்சிக்கு ஒரு கருவி யாகக்கொண்டார். பார்லிமெண்டுக்கு கதோலிக்குகள் மெம்பர்களாக நிற்கக் கூடாதென்ற தடையை ரத்துசெய்ய மேனுமாய் ஆச்சரியகரமான முறைகளில் ஒரு கிளர்ச்சியை அவர் செய்தார். அவர் கதோலிக் ஆனதால் பார்லிமெண்டு மெம்பராக நிற்கமுடியாது. இருந்தபோதிலும் அவர் கவுன்டி கிளேருக்கு மெம்பராக நின்றார். 1828-ல் எல்லா ஜனங்களும் அவருக்கே வோட் செய்தார்கள். அப்பொழுது பிரதம மந்திரி லார்ட் வில்லிங்டன். அவர் புசலக்கு முன் வணங்கினார். பிராடஸ்டெண்டுகளுக்கு உள்ள உரிமைகளை கதோலிக்குகளுக்கு அளித்தார். ஓ' கானல் ஆரம்பித்த அடுத்த கிளர்ச்சி பிராடஸ்டென்டு சர்ச்சுச் செலவுக்கு கதோலிக்குகள் வரிகொடுப்பதைப்பற்றி. இதுவும் வெற்றிகரமாக முடிந்தது. வரிகளை பிராடஸ்டெண்டு மிராசுதார்கள் கொடுக்கிறதென்று முடிவு செய்யப்பட்டது. ஓ' கானல் ஆரம்பித்த மூன்றாவது இயக்கம் சுயாட்சிக்காக அன்றுமுதல் இது தீராத பிரச்னையாகிவிட்டது. ஆனால் பிரிடிஷ் கவர்ன் மெண்டு அவரைச் சிறையில் தள்ளியது. அவர் செல்வாக்கும் குன்றியது. மன முடைந்து அவர் இறந்தார்.

## கிளாட்ஸ்டன்.

தீராத ஐரிஷ் பிரச்னையை தீர்ப்பதற்காக தலை கொடுத்தவர்களுள் மணங் கமழும் பிட், வில்லிங்டன் இவர்கள் பெயர்களைக் கண்டோம். இவர்களுள் அடுத்தபடி—இது விஷயத்தில் ஒருக்கால் முதலானவர்—கிளாட்ஸ்டன். 1869-ல் ஐரிஷ் பிராடஸ்டெண்டு சர்ச்சை அயர்லாந்திலிருந்து எடுத்தார். இதனால் 'அந்நிய சர்ச்' பிரச்னை ஒழிந்தது. ஆனால் அயர்லாந்தின் முக்கிய பிரச்னை பொருளாதார சம்பந்தமானது—'அந்நிய நாட்டு மிராசுதார்'. கிளாட்ஸ்டன் ஐரிஷாரின் க்ஷேமலாபங்களை விருத்தி செய்யக்கூடிய அவருடைய முதல் சட்டம்—ஐரிஷ் நிலச்சட்டத்தை—இயற்றினார். (1) குடிகளின் நிலத்தில் செய்த செய்நேத்துகளுக்கு அவர்களுக்கு மிராசுதார்கள் பணங்கொடுக்க வேண்டும். (2) அனாவசியமாக குடிகளிடமிருந்து நிலங்களைப் பிடுங்கக்கூடாது—இவைதான் அதன் முக்கிய நோக்கங்கள். ஆயினும் இச்சட்டம் அறைகுறையாக

நின்றது; ஐரிஷ் குடியானவன் மறுபடியும் நில ஸ்வான்தார் ஆனலொழிய இப்பிரச்னை தீரமார்க்கமில்லை. இதற்கிடையே அயர்லாந்தின் அடுத்த தலைவர் பதவி வகிக்க ஆரம்பித்தார். அவர்தான் சார்லஸ் ஸ்வேர்ட் பார்நெல் என்பவர். அவர் ஒரு பேசாமடந்தை, ஒரு புதிர், அவர் மனதிலிருப்பதை அறிவார் ஒருவருமில்லை, மிக்கத் திறமை வாய்ந்தவர். ஐரிஷ் நிலச் சங்கத்தின் உதவியால் காமன்ஸ் சபையிலுள்ள ஐரிஷ் கட்சியை அஞ்சக்கூடியதாகச் செய்துவிட்டார். கிளாட்ஸ்டன் 1881-ல் இரண்டாவது நிலச்சட்டத்தை இயற்றினர். எதிர்பார்த்த பயன் இதனல் ஏற்படவில்லை. அயர்லாந்து செகரிடரி லார்டு பிரெடரிக் காவண்டிஷ் பீனியன்களால் கொலை செய்யப்பட்டார். இதனல் கிளாட்ஸ்டன் அடக்குமுறை பாணங்களைத் தொடுக்கவேண்டியதாயிற்று. கொஞ்சம் கொஞ்சமாக கிளாட்ஸ்டன் மனதில், ஐரிஷ் பிரச்னை அதற்கு சுய ஆட்சி கொடுத்தால் ஒழிய தீராது, என்று உதித்தது. 1886-ல் அவர் ஒரு 'ஐரிஷ் சுய ஆட்சி மசோதா' வைக்கொண்டுவந்தார். அதன் முக்கிய அம்சங்களாவன—(1) ஐரிஷ் பார்லிமெண்டு, ஒன்று தனித்து அயர்லாந்தில் அமைக்கப்படும், (2) அதன் அதிகார வரம்பு ஐரிஷ் உள்நாட்டு விஷயங்கள் மீதுதான், (3) அயர்லாந்து ஐக்கிய பிரிடனின் ஒரு அங்கமாக இருக்கவேண்டும். அதற்கு தனித்த ராணுவ, அந்நிய நாட்டு அல்லது நிதிக்கொள்கை கிடையாது. நில ஸ்வான்தார்களிடமிருந்து எல்லா நிலங்களையும் வாங்கி குடியானவர்களுங்குக் கொடுக்க மற்ருெரு மசோதா கொண்டுவர அவர் தீர்மானித்தார்.

இம்மசோதா இங்கிலாந்தில் பெரும் வாக்குவாதங்களை எழுப்பிற்று. அநேக லிபரல்கள் அக்கட்சியிலிருந்து விலகினர். கிளாட்ஸ்டனின் மந்திரிசபை 1886-ல் முறிந்தது. அவர் ஆபீஸிலிருக்கும்போது பார்நெல் சம்பந்தப்பட்ட ஒரு விவாகரத்து கேசு நடந்தது. ஐரிஷ் சுயாட்சி விரோதிகள் இதை வெறுமனே விடுவார்களா? பெரிதுபடுத்தினுர்கள். ஐரிஷ் கட்சி இரண்டுபட்டது. பார்நெல் செல்வாக்குக் குன்றியது. ஐரிஷ் சரித்திரமே இதுபோன்ற ஒரு துக்க நாடகம் தான். மறுபடியும் மறுபடியும் அது ஆசைப்பட்ட பழம் அதன் கைக்கு கிட்டதட்ட கிட்டியது. ஆனல் அச்சமயத்தில் எதிர்பாராத ஒரு விக்னம்—ஜார்ஜ் III-ன் மத ஆட்சேபணை, காவெண்டிஷின் படுகொலை, ஓஷியா விவாகரத்து—ஏதாவது ஒன்று குறுக்கிட்டு கைபழத்தைப் பறித்துவிட்டது. ஆனல் அஞ்சாநெஞ்சுடன் கிளாட்ஸ்டன் 1893-ல், அவருடைய 83-வது வயதில், ஒரு புதிய ஐரிஷ் சுயாட்சி மசோதாவைக் கொண்டுவந்தார். அவருடைய பெருங்குணம் பெரும்பெயர் இவைகள் மந்திரம் போல் மசோதாவை காமன்ஸ் சபையில் நிறைவேறும்படி செய்தன. லார்ட் சபை அதை நிறைவேற்றவில்லை. கிளாட்ஸ்டன் 1894-ல் ராஜீனமா செய்தார்.

## கிளாட்ஸ்டன் முதல் நாளைவரை.

1907-ல் ஐரிஷ் விஷயங்களின் மீது மட்டில் அதிகாரம் பெற்ற ஒரு ஐரிஷ் கவர்ன்மெண்டை ஸ்தாபிக்கக் கொண்டுவரப்பட்ட ஐரிஷ் சபை மசோதா

ஐரிஷாரால் அங்கீகரிக்கப்படாததால் கைவிடப்பட்டது. 1912-ல் ஆஸ்க்வித் அவருடைய ஐரிஷ் சுயாட்சி மசோதாவைக்கொண்டு வந்தார். பிராடஸ்டெண்டு அல்ஸ்டர் உள்பட எல்லா அயர்லாந்திலும் ஒரே அரசாங்கத்துக்கு அதில் வகை செய்யப்பட்டிருந்தது. கதோலிக்கு ஐரிஷார் எல்லோரும் அதை ஆதரித்தனர். 1913-ம்௵ ஜனவரி௴ அது காமன்ஸ் சபையில் நிறைவேறியது, லார்ட்ஸ் சபை அதை மறுத்தது. இதனிடையே லார்ட் கார்ஸான் தலைமையின் கீழ் அல்ஸ்டரில் வாலண்டியர்கள், அவசியமானால் மசோதாவை பலாத்காரமாக எதிர்ப்பதற்காக, ஆயுதப்பயிற்சி செய்து வந்தார்கள். 1914-ம்௵ மே௴ இரண்டாம் தடவை ஆஸ்க்வித் அதை காமன்ஸ் சபையில் நிறைவேற்றினார். லார்ட்ஸ் சபை அல்ஸ்டரை அதிலிருந்து விலக்கிற்று. 1914-ம்௵ ஸெப்டம்பர்௴ அந்த மசோதா இரண்டு சபைகளிலும் நிறைவேறியது. ஆனால் அது யுத்தத்துக்குப் பிறகு தான் அமுலுக்கு வருகிறதென்றும், அல்ஸ்டரின் நிலைமை தக்கப்படி பரிசீலனை செய்யப்படவேண்டுமென்றும் மற்றொரு சட்டம் இயற்றப்பட்டது. இந்த மசோதா அமுலுக்கே வரவில்லை.

இவ்வளவு மறுபடியும் மறுபடியும் சட்டங்கள் இயற்றுவது அதை ஆட்சேபிப்பது, இவற்றுக்கு இடையே, அயர்லாந்தில் மனோபாவங்களின் நிலைமை தெர்மாமீடரில் போல, ஏறுவதும் இறங்குவதுமாயிருந்தது. வடக்கே ‘அல்ஸ்டர் வாலண்டியர்கள்;’ தெற்கே தென் அயர்லாந்தின் ‘ஐரிஷ் வாலண்டியர்களும்’ ‘பிரஜா சைனியமும்’ ஜான் ரெட்மண்டின் கீழ் ஒரு சட்ட வரம்புக்குள் வேலை செய்யும் கட்சி; ஆயினும் ஸின் டீனர்களும் அமிதவாதிகளும் அயர்லாந்தை இங்கிலாந்திலிருந்து பிரிக்க இதுதான் ஏற்ற சமயம் என்று மும்முரமாக வேலை செய்தார்கள். ஜெர்மன் தூண்டுதலையும் ஏற்பட்டது. 1916-ல் ஒரு சிறு கலகம். ஜெர்மன் சப்ளைகள் பிடிபட்டன. ஜெர்மன் ஒத்தாசை எதிர் பார்க்கப்பட்டு தடுக்கப்பட்டது. ஜெர்மன் உள்ஆளாக வேலை செய்து வந்த ஸர்ரோஜர் கேஸ்மெண்டு என்ற ஒரு வேலை நீங்கிய கான்ஸல் பிடிபட்டு தூக்கிவிடப்பட்டான். அல்ஸ்டரைச் சேர்ப்பதா இல்லையா—இந்த விவகாரத்தில் மோதி அநேக ராஜிப்பேச்சுகள் இடையில் முறிந்தன. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தாங்களாக ஒரு சபை கூடி ‘தாயில்’ என்ற பெயருடன், அயர்லாந்து இங்கிலாந்திலிருந்து பிரிந்தது என்ற தீர்மானத்தை நிறைவேற்றி, தங்கள் மந்திரிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்தார்கள். குழப்பம் இத்துடன் நிற்கவில்லை. தாயிலுக்கு சம்பந்தமன்னியில் அமிதவாதிகள் தாங்களாக ஒரு சிறு ‘ஆங்கிலோ ஐரிஷ் யுத்தத்தை’ 1919-ம்௵ ஜனவரி முதல் 1921-வரை நடத்தினார்கள். போலீஸார், அவர்களுக்கு ஒத்தாசை அல்லது அனுதாபம் காட்டுகிறவர்கள். இவர்கள் ஈவிரக்கமின்றி இக்கட்சியால் சுடப்பட்டார்கள். லாயிட் ஜார்ஜின் கவர்ன்மெண்ட் இதை அடக்க ‘கருப்பரும் கபிலரும்’ என்ற ஒரு படையை அனுப்பியது. இங்கும் கொரேம், கொலை, தீவைத்தல், குற்றமில்லாத ஜனங்களுக்கு கஷ்டம்; அங்கும் அப்படியே. விடுதலையின் உதயம் ஆகி விட்டது. ஆயினும் அதற்குமுன் இருள் சூழ்ந்ததுபோல் ஐரிஷ் சரித்திரத்தில் ஒரு பொழுதும் பயங்கரமாயிருந்ததில்லை. 1921-ல் டிஸம்பர் கடைசியில் ஆங்கிலோ ஐரிஷ் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அயர்லாந்து டொமினியன் ஆயிற்று. அத்துடன் சேரும் அல்லது விலகும் பாத்தியம் அல்ஸ்டருக்கு அளிக்கப்பட்டது. அல்ஸ்டர் அயர்லாந்தின் அரசியலி லிருந்து விலகிற்று.

ஆரம்பத்தில் டொமினியனை பரீட்சிக்கக்கூடிய அநேக சோதனைகள் ஏற் பட்டன. டிவேலராவின் கீழ் அமிதவாதிகள் அதை ஆட்சேபித்தனர். எங்கு பார்த்தாலும் பெரும்பிரச்னைகள்—பொருளாதாரம், அரசியல் சம்பந்தமானவை. உள்நாட்டு கலகங்கள் தலைதூக்கின. 1922-ல் ஒப்பந்தத்துக்காக தீவிரமாக முயன்ற ஆர்தர் கிரிபித்ஸ் இறந்தான். மற்றொரு திறமை வாய்ந்த மைக்கேல் காலின்ஸ் 22—8—22ல் அமிதவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டான். இவை களை எல்லாம் சமாளித்து இடைக்கால கவர்ன்மெண்டு ஒரு சட்டபூர்வமான கவர்ன்மெண்டுக்கு ஏற்பாடு செய்தது. டி. எம். ஹீலி என்பவர் 1922 டிஸம்பரில் புதிகாக அமைக்கப்பட்ட ஐரிஷ் டொமினியனின் முதல் கவர்னர் ஜெனரலானார். 1923-ல் காஸ்கிரேவ் முதல் பிரஸிடெண்டானார். 10—9—23ல் அயர்லாந்து ஒரு தனி நாடாக சர்வதேச சங்கத்தில் சேர்ந்தது. டிவேலராவே ஐரிஷ் பார்லி மெண்டில் கலந்துகொள்ள தன்கட்சிக்கு அனுமதியளித்தான்.

## தற்போதையக் கேள்வி.

இன்று அயர்லாந்து அளிக்கும் காட்சி விசித்திரமானது. சுமார் 750 வருஷ மாக அதற்கும், யுத்தத்தில் முக்கிய நாடாகிய பிரிடனுக்கும் சரித்திரம், ஐதீகம், வியாபாரம் இவைகளால் பிணைப்பு. அந்நாடு இன்று நடுநிலைமை வகிக்கிறேன் என்கிறது. ஒவ்வொரு ஆங்கிலேயனும் ஐரிஷ்காரனும் கேட்கும் கேள்விகள் இவை—யுத்தத்தை குறித்து அயர்லாந்தின் போக்கு என்ன? அது கொண்டா டும் நடுநிலைமையை கடைசிவரை ஒப்பேற்றி நிலைநிறுத்த முடியுமா?

## யுத்த மனப்பான்மை.

இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் அரசியல் விஷயங்களில் ஒரு அடிப் படையான வித்தியாசமுண்டு. தன்கீழிருக்கும் நாடுகள், அவைகளின் ஜனங்களை குறித்து ஆங்கிலேயன் வெறுப்புப்பாராட்டுகிறதில்லை, முடியவும் முடியாது. யோசித்துப்பாருங்கள்! அப்படியானல் இன்று அவன் ஐக்கிய அமெரிக்கா, கானடாவில் உள்ள பிரெஞ்சு, ஆபிரிக்காவிலுள்ள போயர்கள், இந்தியர்கள், அயர்லாந்து இவைகளை வெறுக்கவேண்டும். அவ்வாறு செய்யும் ஒரு நாடும் பெரிதாகாது. தீர்ந்த விஷயங்களைத் திரும்பக்கிளராமலிருப்பது—இதுதான் ஆங்கிலேயரின் ராஜரீக பலம். ஆனதால்தான் பிரிடனிலுள்ள எல்லாக் கட்சி களும்—சுயாட்சியை எதிர்த்தவைகள்கூட—அயர்லாந்தின் பழைய கதையை எல்லோரும் மறக்கவேண்டும், இரண்டு நாடுகளுக்குமிடையே பொருளாதாரம், அரசியல் இவைகளில் பரஸ்பர அந்நியோன்யத்தை ஆதாரமாகக்கொண்ட ஒரு புது அத்தியாயம் ஆரம்பிக்கவேண்டும் என்று மனதார விரும்புகின்றன. சுருக்க மாக, பிரிடிஷார் விரும்புவது, இதர டொமினியன்களுக்கும் பிரிடனுக்கும் உள்ள ஒற்றுமை அயர்லாந்துக்கும் பிரிடனுக்கும் இடையேஏற்படவேண்டுமென்பதுதான்.

யுத்த ஆரம்பத்தில், அயர்லாந்தும் கானடா, தென் ஆபிரிக்கா, ஆஸ்ட்ரேலியா, இந்தியா மாதிரி சேர்ந்திருந்தால் பிரிடனின் பெருமை அபரிமிதமாயிருந்திருக்கும்.

சுயாட்சிக்காக போராடின தலைமுறை அயர்லாந்தில் இன்னும இருக்கிறது. அதன் தலைவர்கள் அக்கால விவகாரங்களிலும் பூசல்களிடையே வளர்ந்தவர்கள். இன்றைய அரசியல் அடிப்படைகளை கிரஹிக்க அவர்களுக்கு பழக்கம் போதாது. இந்த யுத்தம் மாஜினோ, சீக்பிரிட் கோட்டைகளுக்குப்பின் தேங்கி நின்றபொழுது ஐரிஷார் யுத்தத்தைப்பற்றி விகடம் செய்தார்கள், அலட்சியமாகவும் இருந்தார்கள். டிவேலரா அயர்லாந்து நடுநிலைமை வகிக்கும் என்று கவர்ன்மெண்டின் கொள்கையை பிரகடனம் செய்தார். தாயில் அயிரீனும் அதை அங்கீகரித்தது. இருளடிப்புகள்கூட ரத்து செய்யப்பட்டன. ஒவ்வொன்றாக டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் விழுந்தவுடன் ஐரிஷ் ராஜதந்திரிகளுக்கு தங்கள் தேசத்தின் ராணுவ ரீதியாக அமைப்பின் அபாயம் முதன் முதலில் புலன் பட்டது. ஹிட்லர் இங்கிலாந்தை எவ்வாறு பிடிப்பதென்று ஆலோசித்து முயற்சி செய்தபொழுது டிவேலராவுக்கு கிலிபிடித்தது. 'நாம் மீளமுடியாத ஆபத்தில் நிற்கிறோம். உஷார்!' என்று அயர்லாந்தை எச்சரித்தார். ஒரு தேசிய பாதுகாப்பு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதில் காஸ்கிரேவ்கட்சி, தொழிற் கட்சி இவைகளின் பிரதிநிதிகளும் சேர்ந்தார்கள். ஆனால் இது ஒன்று நாம் மறக்கவொண்ணாதது—ஐரிஷ் ஜாதியார் ஆபத்து சமயத்திலும் தங்கள் கட்சி பிரதிக்கட்சி மனப்பான்மைகளை ஒதுக்கி, ஒன்று சேர்ந்து வேலை செய்வது பிறவி மூலமாகவே அசாத்தியம் என்று தோன்றுகிறது. தலைவர்கள்—டிவேலரா, காஸ்கிரேவ், நார்டன்—ஒரே மேடைமீது நின்று ஜனங்களுக்குப் பேசினார்கள். ஒற்றுமை அத்துடன் நின்றது. மனதுவரை அது செல்லவில்லை. யாதொரு புதிய, பலமான தேசீயக்கொள்கையும் அதிலிருந்து வெளிவரவில்லை. தேசீய பாதுகாப்பு சபையும் பெரும் பெயர் மட்டில் படைத்து, காரியத்தில் ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. அது தற்போதைய பெரும் ஆபத்தைக் கடக்க போதுமான சக்தி வாய்ந்ததாகக் காணவில்லை.

ஒரு உதாரணம், யுத்த ஆரம்பத்தில் இருளடிப்பு உத்தரவு பிறந்தது. எங்கும் கூக்குரல். அது ரத்துசெய்யப்பட்டது. பயன்—வெளிச்சங்கள் இரவில் ஜெர்மன் நீர்மூழ்கிக்கும், ஜெர்மன் விமானத்துக்கும் வழிகாட்டிகளாகின்றன. இது எதிர்பார்க்கவில்லை என்பது நிஜமே. ஆயினும் பிரிடிஷ் கப்பல்களோ விமானங்களோ அயர்லாந்தின் துறைமுகங்களையும் இறங்கும் இடங்களையும் உபயோகிக்கமுடியவில்லை. வின்ஸ்டன் சர்ச்சில் அவருடைய காமன்ஸ் பேச்சில் இதைத்தான் பட்சபாதமன்னியில் சுட்டிக்காட்டினார். ஜெர்மனிக்கு இந்நடுநிலைமை திருணம். ஐரிஷ் பீரங்கிகள் சென்ற வருஷமுடிவில் வெடிகுண்டுகள் வீசிய இரண்டு விமானங்களைச் சுட்டன. அவைகளில் ஜெர்மன் அடையாளங்கள் இருந்தன. அயர் ஜெர்மனியைக் கண்டித்தது. ஜெர்மனி விமானங்கள் தன்னுடையது அல்ல என்று பொய் சொல்லிற்று. அயர் என்னசெய்ய முடியும்? ஆனால் இது காலம் விடுக்கும் ஒரு சவாலும் எச்சரிக்கையும்!

## அயர்லாந்தின் ராணுவபலம்.

அயரின் ஒழுங்குப் படை 27,000 தான். பிரிடிஷ் உள்நாட்டு காபந்துப் படை அமைப்பை அனுசரித்து அதுவும் ஒரு (L. S. F., Local Security Force) படை திரட்டியிருக்கிறது. அதில் 1,00,000 பேர். தேசியப்படை எல்லாப் படைகளும் 2,00,000 இருக்கலாம். ஆனால் அது நவீன முறைகளில் பழகியதல்ல. யந்திர சாதனங்கள் கிடையாது. ஐரிஷ் விமானப்படை கொஞ்சம் கூடபோதாது. ஐரிஷ் கடற்படை ஒன்றுக்கும் உதவாது. சமீபத்தில் ஐரிஷார் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டுக்கு யுத்த தளவாடங்களை அனுப்பும்படி கோரிக்கை மேல் கோரிக்கை விடுத்தனர். ஐரிஷார் தைரியசாலிகள்தான். ஆயினும் கைகலக்கும் யுத்தத்தில் தைரியம் காட்டும் நாட்கள் மலையேறிவிட்டன. இது யந்திர அணிவகுப்புகள், பாய்ச்சல் விமானங்கள் நாள். நாஸிகள் அயர்லாந்து தங்களுக்கு தேழ்வையென்று எண்ணினால், அவர்களுடைய விரைந்து செல்லும் மோட்டார் படைகள், ஜங்கர் விமானங்களின் தாக்குதலுக்கு முன் ஐரிஷார் எம்மாத்திரம்?

## நடுநிலைமை வகிப்பதா? அல்லவா?

ஐரிஷாருக்கு நாஸிக்கொள்கையில் அனுதாபம் கிடையாது; அப்படிச் சொல்வது அபாண்டம். பிரிடிஷார் நாஸிஸத்தை எவ்வளவு வெறுக்கிறார்களோ, அவ்வளவு அவர்களும் வெறுக்கிறார்கள். பிரிடிஷ் கவர்ன்மெண்டு ஐரிஷ் பயங்கரக் கட்சியை எவ்வளவு கண்டிப்பாய் நசுக்கியிருக்கிறதோ அவ்வளவு கண்டிப்பாய் அயர்லாந்தும் நசுக்கியிருக்கிறது. நாஸிகளின் ஐந்தாம் படை முயற்சிகளை வேரறுக்க முயற்சிகளும் செய்துவருகிறது. முன் இங்கிலாந்தின் கஷ்டகாலங்களில் போலவே இப்பொழுதும் ஐரிஷார் பிரிடிஷ் படைகளில் ஏராளமாகச் சேர்ந்திருக்கின்றனர். பிரிடனின் அரசியல், ராணுவம், கடற்படை, விமானப்படைத்தலைவர்களில் அநேகர் சுத்த ஐரிஷார், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளுக்கு ரொம்ப அனுதாபமுண்டு. ஜெர்மன் வெடிகுண்டுகளால் நெஞ்சுடையாத பிரிடிஷாரைக் கண்டு அனுதாபமும் மெச்சுதலையுமுண்டு. அயர்லாந்து கண்முன் நடுநிலைமை நடுநிலைமை என்று சொல்லி அழிந்த நாலு நாடுகளின் உதாரணம் நிற்கிறது. இங்கிலாந்து ஆபத்திலிருந்து இன்னும் விடுதலையடையவில்லை; ஜெர்மனி அடியோடு தோற்றால்தான் ஆபத்து விலகும். ஆனதால் அயர்லாந்து கொண்டாடும் நடுநிலைமை ஒரு நிமிஷம் கவைக்கு உதவாது என்பதும் அதற்குத் தெரியும். இங்கிலீஷ் கால்வாய் துறைமுகங்களைத் தங்கள் கையிலிருக்கையில், அயர்லாந்தும் ஒத்துமையின்றி பலமின்றி கிடக்கையில், அது மேற்கே இருந்து பிரிடன் மீது பாய ஒரு விரும்பத்தக்க பாய்ச்சல் பூமியாகும். ஜெர்மன் ராணுவத்தார் அதைப் பிடிக்க வேண்டுவதவசியம் என்று திட்டம் வகுத்துவிட்டால் அயர்லாந்து என்ன நன்றாக நடுநிலைமை வகிப்பினும், அது அதற்கு உதவாது. இதுவரை அயர்லாந்தை காப்பாற்றியது அதன் நடுநிலைமையல்ல; பிரிடிஷ் கடற்படை. ஐரிஷாருக்கே இது தெரியும்.

இது இப்படியானால், தங்கள் தேசத்து பாதுகாப்புக்கு பிரிட்டனுடன் சேர்ந்து ஆலோசனை செய்வதில் என்ன அப்யந்தரம்? பதில் இதுதான். இதற்காக பிரிடிஷ் ராணுவம், கடற்படை, விமானப்படைகளுக்கு அயர்லாந்தின் கொத்தளங்களை உபயோகிக்க அனுமதிக்கவேண்டும். அயர்லாந்தில் ஒரு பழைய தலைமுறை இருக்கிறது. அது பிரிடிஷார் அயர்லாந்தில் புகுந்துவிட்டால் அவர்கள் லேசில் வெளியேறமாட்டார்கள் என்று நம்புகிறது. இந்தப் பழங்கட்சிதான் மிக்க வாகுப்தனுகவும், ஸ்தாபனங்கள் உள்ளதாகவும், செல்வாக்குள்ளதாகவும் இருக்கிறது. இதுதான் காஸ்கிரேவ் கவர்ன்மெண்டை விலக்கி, டிவேலராவை தலைவனுக்கிற்று. டிவேலராவுக்கு இக்கட்சியை விரோதிக்க பயம். தற்பொழுது அயர்லாந்தின் ஒரு தலைவனும், 'பிரிடிஷாரிடம் கொத்தளங்களை யுத்தத்துக்காக ஒப்புவிப்பது, இரண்டு சேனை ஸ்டாப்களும் சேர்ந்து முன்கூடி ஆலோசிப்பது' என்ற அவசியமான யோசனையை ஜனங்களுக்கு முன் சொல்லவருவது சந்தேகம். அதற்கு பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் அல்லது வின்ஸ்டன் சர்ச்சிலைப்போல் தைரியம் வாய்ந்து, ஜனங்கள் போகிறவழியில் போகாமல் ஆனால், அவர்களைத் தன் வழிக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு தலைவர்வேண்டும். அயர்லாந்தில் இன்று அப்படி ஒருவருமில்லை. அதன் தற்போதையத் தலைவர்கள் பிரிடிஷ் கவர்ன்மெண்டிலிருந்து சுயாட்சிபெற்றவுடன் உத்தியோகத்துக்குவந்த பழையக் கிளர்ச்சிக்காரர்கள்; 'பஞ்ச்' என்ற ஆங்கில விகடப்பத்திரிகை அயர்லாந்தின் நடுநிலைமையை ஒரு வேடிக்கைச் சித்திரத்தில் காட்டியிருக்கிறது. டிவேலரா முகத்தோடுகூடிய ஒரு நெருப்புக்கோழி பழமொழிப் பிரகாரம், தன் தலையை ஒரு மணற்கூடைக்குள் 'அனுப்பிசகாத நடுநிலைமை' என்று சொல்லிக்கொண்டு, தன் தலையைப் புதைத்துக்கொள்ளுகிறது. இது ஒரு நியாயமான சித்திரமே. அயர்லாந்தில் யாதொரு பொருப்புவாய்ந்த தலைவரும், யாதொரு ஆராய்ச்சி செய்பவனும், இங்கிலாந்து 1921-ல் கொடுத்த வாக்குறுதியை மீறும் என்றோ அல்லது கொத்தளங்களை விட்டுக்கொடுத்தால், யுத்தத்துக்குப் பிறகு திருப்பிக் கொடுக்காது என்றாவது, அயர்லாந்திலாவது உட்கார்ந்துவிடும் என்றாவது நம்பவில்லை. சென்ற சரத் காலத்தில் அயர்லாந்தின் நிலைமையால் அட்லாண்டிக்கில் பிரிடனுக்கு கப்பல் நஷ்டம் ஜாஸ்தி. தற்காப்புக்காக மட்டில் பிரிடன் அப்பொழுது அயர்லாந்தைப் பிடித்து உபயோகித்துக்கொண்டிருக்கலாம். இதில் இருந்து ஜெர்மனி பின்வாங்கியிராது. இருந்தபோதிலும் இங்கிலீஷார் பின்பற்றும் சர்வதேசசங்கமுறைகளை அனுசரித்து, அவர்கள் அயர்லாந்துக்கு தங்கள் நல்ல எண்ணத்தை சந்தேகிக்கக்கூட கொஞ்சமேனும் இடங்கொடுக்கவில்லை.

இருந்தபோதிலும் அயர் நடுநிலைமையை உதறிவிட்டு பிரிடிஷ் டொமினியன்களுடன் சேருவதில் அநேக சௌகர்யங்களுண்டு.

1. தனக்குத்தானே ஆபத்தாயிருக்கும் நிலைமையிலிருந்து அது விலகும். இங்கிலாந்துக்கும், வெற்றிக்கும், ஜனநாயகத்துக்கும் ஆபத்தாயிருக்கும் நிலைமையிலிருந்து மீளும்.

2. இங்கிலாந்து, ஜெர்மனி, இவைகளின் முற்றுகைகளால் அயர்லாந்து பாதிக்கப்படுகிறது. 1940-ம் வருஷ கடைசியில் உணவு, இதர சப்ளைகளில் நெருக்கடி

ஏற்பட்டது. தனித்து நிற்பதைவிட்டுவிட்டு யுத்தத்தில் சேர்ந்தால் சப்ளை களுக்கு சாம்ராஜ்ஜிய காபந்து கௌன்ஸில் பொறுப்பேற்றுக்கொள்ளும்.

3. யுத்தத்துக்குப்பின் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திலும் உலக அமைப்பிலும் அநேக மாறுதல்கள் ஏற்படப் போகின்றன. தன் ஸ்வரூபஹானியன்னியில் அயர்லாந்தும் இவ்வேற்பாடுகளில் எளிதில் பொருந்தலாம்.

4. அயர்லாந்துக்குள் எங்குபார்த்தாலும் கக்ஷிகளும் பிரதிக்கக்ஷிகளும் யுத்த நெருக்கடியில் இவைகளை மறந்து தேசியப்பிரச்சனைகளை ஒரு கூட்டுறவு திருஷ்டிகோணத்திலிருந்து தீர்க்க முயற்சிக்கலாம்.

5. அயர், வட அயர்லாந்தின் 6 கவுண்டிகளும் தன்னுடன் சேர தீவிரமாக விரும்புகிறது. ஆனால் வட அயர்லாந்து அயர் நடுநிலைமை வகிப்பதால் ராஜத் துரோகம் செய்ததாகக்கருதுகிறது. அயர் யுத்தத்தில் இறங்கினால் இரண்டு பகுதிகளுக்குள்ளும் கலந்து யோசனை செய்ய அடிக்கடி பிரமேயங்கள் ஏற்படும். இதனால் அயர்லாந்தும் ஒன்றுபடலாம்.

ஒருக்கால் அயர்லாந்து இரண்டு காரணங்களினால் யுத்தத்தில் இறங்க வேண்டி நேரலாம். அயர்லாந்திலிருந்து நாடு கடந்த மக்களுக்கு ஐக்கிய அமெரிக்கா இடமளித்தது. அதனால் அமெரிக்காவை ஐரிஷார் தனக்கு குருவாக வும் நண்பனாகவும் கருதுகின்றனர். அயர் இன்று நடுநிலைமை வகிப்பது அமெரிக்கா வுக்கும் பிடிக்கவில்லை. சுயநலமற்ற அமெரிக்காவின் புத்திமதி அயரின் பொது மக்களின் அபிப்பிராயத்தை மாற்றலாம். அமெரிக்காவிலிருந்து வெண்டல் வில்கி, கர்னல் டானவன் போன்ற தக்க பிரமுகர்கள் விஷயங்களை கவனிக்க அயருக்குள் போயிருக்கிறார்கள். அவர்களாகவே அயர்லாந்தை தன் நடுநிலைமை யை விட்டு விடும்படி புத்திமதி கூறியிருக்காலாம் என்று தோன்றுகிறது. இதுவே கெட்டிக்காரத்தனம்; சாவதானம். இரண்டாவது பக்ஷம் மிக்க பயங்கரமானது. அது ஜெர்மனி அயரின்பேரில் படை யெடுப்பதாகும். அப்படியானால் அயரைக் கேட்டோ கேட்காமலோ முன்பின் ஸ்டாப் (Staff) திட்டங்களன்னியில் பிரிடன் அதைப் பாதுகாக்க வேண்டிவரும். ஏற்கனவே ஏற்பட்ட தாமதத்தில் அபாயம் ஏற்படலாம். இனியும் அயர்லாந்து தன் நடுநிலைமையை விட்டு விட்டு பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துடன் சேராமலிருக்கும் பக்ஷத்தில் அயரைப்பற்றி உலகின் அபிப் பிராயம் இதுவாகும்:—

மற்றோர் கடமை நழுவியது;
மற்றோர் வழியும் தப்பியது;
மற்றோர் வெற்றி பேய்களுக்கு,
மற்றோர் துக்கம் தேவருக்கு,
மற்றோர் தீங்கு மக்களுக்கு,
மற்றோர் அபசாரம் கடவுட்கு.

# வார யுத்தச் செய்திகள்.

(6—3—41 லிருந்து 12—3—41 வரை).

**பிரிடனுக்கு உதவி-மசோதாவானது**, 17-நாள் சர்ச்சை செய்யப்பட்டு, முடிவில் இடைவிடாது 11-மணி நேரம் தர்க்கிக்கப்பட்டு, 60 பேர் சாதகமாகவும், 31 பேர் பாதகமாகவும் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டு மார்ச்சு 8-ல் ஸெனெட்டால் அங்கீகரிக்கப்பட்டது. விமானங்களையும், யுத்தக் கப்பல்களையும் கொடுக்கக்கூடாதென்றும், துணைக்கப்பல்கள் போகக்கூடாதென்றும் கொண்டுவந்த திருத்தங்கள் தேறவில்லை: ஆனால், உணவுப்பொருள்களையும், யுத்த தளவாடங்களாகக் கருதி யனுப்பக் கேட்டுக்கொண்ட கவர்ன்மெண்ட் திருத்தம் நிறைவேறிற்று. பிறகு, 11-ம் தேதியன்று பிரதிநிதிசபை ஸெனெட் திருத்தங்களை ஒப்புக்கொண்டு, 317-பேர் சாதகமாகவும், 71-பேர் பாதகமாகவும் பாஸ் செய்ய, முழு மசோதாவையும், காங்கிரஸ் சபை முடிவாக அங்கீகரித்து, அன்றே பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டும் அதற்குக் கையொப்பமிட்டார்.

யுத்தத்தில் நேரே சண்டை செய்வதைத் தவிர மற்றெல்லாவித உதவியையும், இந்த மசோதாப்படி, யுனைடட் ஸ்டேட்ஸ் ஜனநாயக நாடுகளுக்குக் கொடுக்கும். இனி, ஸால் புலும் சொல்லியபடி ஆக்கிரமிப்பைத் தடுக்க ஜனநாயகத்துக்கு முடியாது என்ற வசைச்சொல் போய், அமெரிக்கா, முழித்துக்கொண்டு ஜய பேரிகையை யடித்து, சுதந்திர தேசங்களுக்கெல்லாம் வேண்டிய உதவியைக் கொடுக்கும்.

அமெரிக்காவில் ஏராளமாக விளையும் உணவும், பருத்தியும், சர்வாதிகாரிகளோடு போர் செய்யும் நேயர்களுக்கெல்லாம் இனிக்கிடைக்குமென்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் மார்ச்சு 9-ல் ஒலிபரப்பினர்.

மசோதா அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து, உடனே, 32,50,00,000 பவுன் பெறுமான யுத்த சாமான்களும், 75 நாசகாரிகளும் (?) அநேக மஸ்கிடோ, குரூஸர், என்ற யுத்தக் கப்பல்களும், இறைச்சி, வெண்ணெய், கோதுமை முதலிய உணவுகளும் அனுப்பப்படும். இவைகளை ஏற்றிச்செல்ல, அவசியமிருந்தால் அமெரிக்கத் துறைமுகங்களிலிருக்கும் 37 டச்சுக் கப்பல்கள் எடுத்துக்கொள்ளப் படும்.

**கடற்சண்டை.**—சென்ற வாரத்தில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் லோபோடன்ஸ் தீவுகளை எதிர்த்த விவரங்கள் இப்பொழுது வெளிவந்திருக்கின்றன. அங்குள்ள திமிங்கில எண்ணெயெடுக்கும் தொழிற்சாலைகளையும், எதிரிகளின் கப்பல்களை உடைப்பதோடு, அங்கு வசிக்கும் ஜெர்மானியர்களையும் பிடிப்பதற்காக பிரிடிஷ் கப்பற்படை சென்றது. ஒன்பது ஜெர்மன் வியாபாரக் கப்பல்கள் ஒரு டிராலர், ஒரு நார்வேயின் வியாபாரக் கப்பல், 215 ஜெர்மானியர்கள் 10 நார்வேக்கார துரோகிகள் பிடிபட்டதோடு, நான்கு துறைமுகங்களிலுள்ள எண்ணெய்-இறக்கும் தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. மேலும் அங்குள்ளவர்களுக்கு

அன்ன வஸ்திரதானம் செய்துவிட்டு, அடிமை நீங்கி, பிரிடனுக்கு வந்துவிட விரும்பிய 300 நார்வேக்காரர்களைச் கப்பல்களிலேற்றிக்கொண்டு பிரிடனுக்குக் கொண்டு வந்து சேர்த்து, அங்கேயிருக்கும் நார்வே அரசரும் அவர்களை அன்போடு வரவேற்றார்.

இந்தத் தீவுகள் ஜெர்மனியின் பின்புற வாசலென்று சொல்லப்படுகின்றன. ஆனால், பிரிடிஷ் கப்பல்கள் இவைகளைத் தாக்கியபோது, ஏதோ சில மீன்பிடிக்கும் கப்பல்கள் எதிர்த்ததைத் தவிர வேறொரு ஜெர்மன் கப்பற்படை எதிர்ப்பும் கிடையாது. இவைகளில் மூன்று கப்பல்கள் அமிழ்த்தப்பட்டன. இது ஒரு சிறு சம்பவமானாலும், சாமர்த்தியமாயும் கச்சிதமாயும் நடத்தப்பட்டது. ஐரோப்பிய கடற்கரையில் நீண்டபாகம் இப்பொழுது ஜெர்மனியின் கையிலிருக்கிறது. இதில் எந்த பாகத்திலும் இனி பிரிடன் இம்மாதிரிப் படையெடுக்கப் போவதற்கு இது ஒரு சூசனையாகும்.

பிரிடனுக்கு அமெரிக்காவிலிருந்து வரும் உதவியைத்தடுத்து, சமுத்திரமார்க்கங்களை அடைத்து விடுவதாக சாராயக்-கிட்டங்கிப் பிரசங்கத்தில் பயமுறுத்தியபடி, அட்லாண்டிக் சமுத்திரத்தில் கடற்சண்டையை ஹிட்லர் துவக்கி விட்டதாகத் தோன்றுகிறது. மார்ச்சு 2-ம் தேதி நிசியோடு முடிவான ஒரு வாரத்தில், 1,48,000 டன் நிறைகொண்ட 29 பிரிடிஷ் கப்பல்கள் சேதமாயின. ஆனால், எதிரி இதை இரட்டித்துப் பொய்க்கணக்குக் கொடுத்திருக்கிறான். இந்த நஷ்டம் அதிகம்தான். இதற்கதிகமாக இதுவரையில் இரண்டு சமயங்களில்தான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது; இனி இந்த வீதப்படி நஷ்டமேற்படக் காரணமுமில்லை. எதிரி மூர்க்கத்தனமாய் செத்தாலும் சரி, பிழைத்தாலும் சரியென்று, முழுபலத்தோடு இப்பொழுது எதிர்க்கிறான். இந்த சமயத்தில் நமக்குச் சற்று பலமான நஷ்டமேற்படக்கூடியதுதான். இதைத் தடுக்கவேண்டிய பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. நம்மைத் தாக்கும் எதிரியினுடைய ஆகாயக் கப்பல்களும், கடற்கப்பல்களும், நம்முடைய நஷ்டத்தை ஈடு செய்ய அழிக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் அனுபவத்திலிருந்து விசாரப்படக் காரணமில்லை. புதுக்கப்பல்களைக்கட்டியும், விலைக்கு வாங்கியும், பிடித்தும், இதுவரையில், அதாவது 18 மாதங்களிலேற்பட்ட, 43,00,000 டன் கப்பல் நஷ்டம் வெகுவாய் ஈடுபட்டு, பாக்கி 100-க்கு 4·8 வீதம்தான் பாக்கியிருக்கிறது. 'வஸந்தகாலங்கள் பல இனி வரத்தான்போகின்றன. பிரிடன் கடலுக்கரசியாய்த்தான் வாழ்ந்து கொண்டிருக்கப்போகிறது' என்று அட்மிரல் கன்னிங்காம் சொன்னது உண்மையே.

**பால்கன் நாடுகள்.**—சில உண்மைகளும், பல வதந்திகளும் கலந்த சமாசாரங்கள்தான் பால்கன் நாடுகளைப் பற்றிக் கிடைக்கின்றன. ருமேனியாவை ஜெர்மன் படைகள் பூராவாக ஆக்கிரமித்துவிட்டன. அதன் தலைவர் இனி ருமேனியாவுக்குத் தனி சைனியம் வேண்டாமென்றும் ஜெர்மன் படையால் ரக்ஷிக்கப்படுவது லாபமென்றும் சொல்லிவிட்டார்.

பல்கேரியாவில் ஜெர்மன் சைனியம் ஏராளமாய் வந்து, பிளோவ்டிவ்வில் கூடுகின்றன. ஸோபியாவிலிருந்த பிரிடிஷ் மந்திரியும் டச், ஹாலண்ட், போலண்ட் பிரதிநிதிகளும் புறப்பட்டுவிட்டார்கள். இஸ்டாம்பூலுக்கு வரும் போது ரெயில் வண்டியை உடைக்க எத்தனிக்கப்பட்டது. பிரிடிஷ் மந்திரியின் உடுப்புப் பெட்டியில் எதிரிகளால் ஒளித்து வைக்கப்பட்ட வெடியொன்று அவர் இஸ்டாம்பூலில் தங்கிய ஹோட்டலில் வெடித்து, கட்டடத்தின் கீழ்பாகம் சேதமாகி, 3 பேர்கள் இறந்து, 20 பேர்கள் காயப்பட்டார்கள்.

யுகோஸ்லாவியாவானது ஜெர்மனியோடும், ருஷ்யாவோடும் உடன்படிக்கை செய்துகொள்ளப் போவதாகவும், இதாலியோடு சிநேகம் செய்துகொண்டு, பல்கேரியாவுக்கு சில பாகங்களைக்கொடுத்து, யுத்தகாலத்துக்கு சில ராணுவ ஸ்தானங்களை நாஸிகள் உபயோகிக்க கிரீஸைக்கட்டாயப்படுத்தி ஜெர்மனி இறுதிப் போர்கடிதம் அனுப்பியிருப்பதாகவும், அதன் முடிவாகத் திரேஸ் பிராந்தியங்கள் காலி செய்யப்படுவதாகவும் வதந்திகள் உலாவுகின்றன. இதுவரையில் கிடைத்திருக்கும் செய்திகள்படி கிரீஸ் தைரியமாய் நிற்கிறது. 'மேற்குமுனை வெற்றி' யென்ற நாஸி சினிமாவைப் பார்க்க துருக்கியின் மந்திரிகள் மறுத்து விட்டதிலிருந்து துருக்கியின் திடமனோநிலை வெளிப்படுகிறது.

**ஆபிரிக்காவிலும் அல்பேனியாவிலும் யுத்தம்.**—நேயர்களின் துணையைக் கொண்டு, பிரிடன் யுத்தத்தை நடத்திக்கொண்டு போகிறது. திரிபோலியின் துறைமுகம் இருமுறை எதிர்க்கப்பட்டது. இதாலிய சோமாலிலாண்டின் கப்ரெடாரியும், அபீசினியாவில் புர்யாவும் பிடிபட்டபிறகு, பெர்பர், ஜிம்மா டம்பாசா, டோலோ, அபோடு என்ற ஸ்தலங்களும் பிடிக்கப்பட்டன. தன்னுடைய சைனியத்துக்கு தைரியம் புகட்ட முஸோலினி அல்பேனியாவுக்குச் சென்றிருந்த சமயத்தில், நான்கு நாட்கள் ஓயாது சண்டைசெய்து கிரேக்கர்கள் மத்தியப்போர் முனையில் முன்னேறி, இதாலியர்களுக்குப்பெருத்த நஷ்டத்தை உண்டாக்கி விட்டனர். மூன்று பாஸிஸ்ட் தலைவர்கள் மாண்டார்கள். மாஜி கல்வி மந்திரி பாடாய் என்பவன் முன்னணிகள் பின்வாங்காதிருக்க, பின்அணிகளைக்கொண்டு அவர்களைச் சுட்டுக்கொண்டிருக்கும்போது தானும் இறந்தான். அவன் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட நிருபத்தில் 'கிரேக்கர்கள் முன்னேற்றத்தைத் தடுக்காவிட்டால் பாஸிஸ்ட் கக்ஷியானது, மானமிழந்து அழியும்' என்று முஸோலினியெழுதிய கடிதமொன்று அகப்பட்டது.

**விமானப்போர்.**—இந்த வாரத்தில், மூன்று முறை பிரெஞ்சுத் துறைமுகங்களைப் படையெடுத்தது. பிரிடிஷ் விமானங்கள், மறுபடியும், வில்ஹெல்ம் ஷாவன், எம்டன், கொலோன் முதலிய நகரங்களையும் தாக்கின. வஸந்த காலம் வந்தவுடன் பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியை பலமாக எதிர்க்கப்போவதைப் பற்றி ஜெர்மானியருக்கு ஜெர்மன் ரேடியோ எச்சரிக்கைக் கொடுத்திருக்கிறது.

எட்டு வாரங்களாக அமைதியாயிருந்துவிட்டு, இந்த வாரம் பிரிடன் மேல் ஜெர்மன் விமான எதிர்ப்பு துவக்கப்பட்டிருக்கிறது. 8-ம் தேதியன்று ஒரு

ஹோட்டலில் நர்த்தனம் (டான்ஸ்) செய்து கொண்டிருக்கும்போது, அங்கே வெடியொன்று விழுந்து, சிலர் இறந்து, சிலர் காயப்பட்டார்கள். இது வரையில் 2,000 பிரிட்டிஷ் கோவில்களை சேதப்படுத்தியிருப்பதிலிருந்து ஜெர்மனியின் தெய்வபக்தி வெளியாகிறது. பிரிடன்மேல் நடத்திய போரில் இதுவரையில் ஜெர்மனிக்கு 3,123 விமானங்கள் சேதம். இவைகளில் 1,800 நில பீரங்கிகளால் சுட்டுத்தள்ளப்பட்டன.

**பிரான்ஸ்.**—பிரெஞ்சு வியாபாரக்கப்பலுக்குத் துணையாக பிரெஞ்சு யுத்தக் கப்பல்கள் இனிப் போகுமென்று பிரெஞ்சு மந்திரி டார்லான் சொல்லுகிறார். பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையைப் பற்றி அவரின்னும் சரியாய்த் தெரிந்து கொள்ளவில்லை. ஜெர்மனிக்குச் சகாயமில்லாத வரையில், பிரிடன் பிரான்ஸுக்குதவி செய்யும். பிரான்ஸோ, பொருளாதார சம்பந்தமாய் ஜெர்மனியோடு ஒத்துழைப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறது. டார்லான், அவர் கீழிருக்கும் 4,000 லக்ஷம் பிரெஞ்சுக்காரர்களுக்கு உணவைத்தேடியவர்தான். ஆனால் இவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஸ்வதந்திரத்தைத் தேடிக் கொடுக்க பிரிடன் ஜெர்மனியை வளைத்து முற்றுகை போட்டிருக்கிறது.

பிரிடனுக்கு, பிரான்ஸினிடத்தில் இரக்க மில்லாதில்லை. உதாரணமாக இந்த வாரத்தில் பிரிடனுடைய சம்மதத்தின்பேரில் பிரெஞ்சுக் குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும் வேண்டிய உணவு முதலானவைகள் மார்ஸெயில்ஸ் துறை முகத்தில் அமெரிக்காவிலிருந்து வந்து இறங்கியிருக்கின்றன. இன்னும் 3 வாரங்கள் கழித்து மற்றொரு கப்பல் இதே பிரகாரம் வரும்.

இவ்விதமல்லாது வேறுவிதமாய் பிரிடன் போட்டிருக்கும் முற்றுகை தளர்த்தப்படாது. ஹூவர் சொல்லியபடி, பரிக்ஷார்த்தமாக பெல்ஜியத்தில் கஞ்சித்-தொட்டிகளும் வைக்கப்படா.

அக்டோபர் மாதத்தில் வட-ஆபிரிக்காவுக்குப் போன ஜெனரல் வேகாண்ட் விஷிக்கு வந்து, ஜெர்மன் ஒப்பந்தப்படி செய்யவேண்டிய பாதுகாப்புக் காரியங்களைப்பற்றிப் பேசிவிட்டு, திரும்பிவிட்டார்.

பிரெஞ்சு மொராக்கோவிலுள்ள கஸாப்ளான்காவில் ஜெர்மன் துருப்புகள் வந்திருப்பதாக மார்ச்சு 5-ல் பார்லிமெண்டில் சொல்லப்பட்டது.

**இதாலி.**—சமீபத்தில் செய்துகொண்ட ஒரு உடன்படிக்கைப்படி, இதாலியானது ஜெர்மனிக்குப் பழங்கள், காய்கறி, பாதரஸம், வெள்ளி, சணல், பட்டு முதலியவைகளை விற்று, பதிலாக நிலக்கரியையும், யுத்த சாமான்களையும் வாங்கிக் கொள்ளச் சம்மதித்திருக்கிறது. இது இதாலியின் மொத்த வியாபாரத்தில் 100-க்கு 90 பாகமாகும். ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாதலால், பாக்கித் தொகையை, தற்போதைக்கு, கடனாக பாவித்து, பிறகு யுத்த முடிவில் சமயத்துக்குத் தக்கபடி ஜயித்தால், கணக்குத் தீர்க்கப்படும். அல்லது ஜெர்மனி பாக்கியை வசூலிக்காதுமிருந்துவிடலாம்.

இதாலியானது, இப்பொழுது ஜெர்மனியின் ஒரு பாகமாய்விட்டதென்றும் பல்கேரியாவிற்கும் கேவலமாய்ப் போய்விட்டதென்றும் தெரிகிறது. இதாலியத் துறைமுகங்களெல்லாம் ஜெர்மனியின் கைவசமாயின. இதாலிய போலீஸ் ஜெர்மன் ரகஸிய போலீஸின் சொற்படி நடக்கிறார்கள். முஸோலினி தன்னுடைய ஆட்களை ஊர் ஊராக அனுப்பி ஆபிரிக்கா தோல்வியிலிருந்து அதைரியப்படாமல் இருக்கவும் வாயை மூடிக்கொண்டு சொன்னதை நம்பிக்கொண்டிருக்கவும் பிரசங்கம் செய்யச் சொல்லுகிறார்.

ஜெர்மானியர் ஆக்கிரமித்திருக்கும் நேபிள்ஸ், பாலர்மோ நகரங்களிலுள்ள அமெரிக்க காரியஸ்தர்களை இதாலி போகச் சொல்லிவிட்டது. அதற்குப் பதிலாக, பாஸிஸ்ட் இதாலியர்கள் நிறைந்த அமெரிக்கப் பட்டணங்களாகிய டெட்ராயிட், நியூயார்க் நகரங்களிலிருந்து இதாலிய காரியஸ்தர்களை அமெரிக்கா போகச் சொல்லிவிட்டது.

**தூரக்-கிழக்குப் பிரதேசம்.**—ஜப்பான் மத்தியஸ்தம் முடிந்து, கக்ஷிக்காரர்கள் 11-ம்தேதி கையொப்பமிட்டார்கள். மத்தியஸ்தமெல்லாம் பலவந்தம்தான். இதிலிருந்து தாய்லாந்துக்கு அதிக பூஸ்திதியும், மீகாங் நதிக்கரையோரமாக எல்லையும் கிடைத்திருக்கிறது. இரு கக்ஷிக்காரர்களும் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஜப்பான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுதான் அச்சினுடைய சம்பிரதாயம். முதலில், மத்தியஸ்தமென்பார்கள்: பிறகு ரக்ஷிப்பேனென்பார்கள்: முடிவில், வாயில் போட்டுக்கொள்ளுவார்கள்.

மத்ஸுவோகா, மாஸ்கோ, பெர்லின், ரோம் நகரங்களுக்குப் போவார். பிரிடனுக்குச் சகாய மசோதாவிலிருந்து ஏற்படும் காரியங்களைப்பற்றி சர்ச்சை செய்வார்.

**பிரிடன்.**—அடுத்த வருஷ வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் கேள்விப்படாத செலவு திட்டம் போடப்படும். இதற்காக ரெயில்வே சார்ஜுகளுக்கும், ஹோட்டல் சார்ஜுகளுக்கும் புது வரிகள் போடப்படும். அமெரிக்க-பிரிடிஷ் உதவி மசோதாவிலிருந்து ஏற்படும் செலவு இந்த திட்டத்துக்கு வராது.

சமீபத்தில் எடுத்த ஒரு கணக்குப்படி பிரிடனில் 1,25,000 பேர்கள் வேலையில்லாதிருந்தார்கள். இப்பொழுது காலியாய் ஒருவருமில்லை. யுத்த காரியங்களுக்கு தொழில்செய்ய 1,00,000 பெண்மக்கள் தேவையென்று மிஸ்டர் பெவின் பிரசுரம் செய்திருக்கிறார்.

இதுவரையில் அநுக்கிரகம் செய்த நன்மைகளுக்காக ஆராதிக்கவும், இனி போர் நடத்த ஆர்வத்தைக்கொடுத்து வழிகாண்பிக்கவும் கடவுளைப் பிரார்த்திக்க மார்ச்சு 23-ஐக் குறித்து, அன்றுதினம் ஆலயங்களில் பிரார்த்தனைகள் செய்து கொள்ள மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தி பெருமான் ஆக்ஞாபித்திருக்கிறார்.

| தேதி. | பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **3—3—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **ராணுவ முக்கியமுள்ள இடங்கள், தொழிற் சாலைகள்.**—கொலோன் (Cologne). | ...... | பல இடங்களில் தீ மூண்டது. |
| | **கப்பற்துறைகள்.**—புலாயின் (Boulogne), ஆஸ்டெண்ட் (Ostend), ப்ரஸ்ட் (Brest). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | **படையெடுத்தல்.**—வட—பிரான்ஸி(France)ல் இருக்கும் விமான நிலயங்கள், விரோதி ஆக்கிரமித்திருக்கும் நாடுகள். | 1 விமானம். | பல ஜேர்மன் விமானங்கள் சுடப்பட்டோ, சேதமாயோ போயின. |
| | **கப்பற்துறைகள், ரயில் வண்டிகள் நிறுத்தி வைத்திருக்கும் இடங்கள்.**—கலே(Calais) | ...... | ...... |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | **மோட்டார் வண்டிகள்.**—டெபெலேனி (Tepeleni) பிரதேசம். | ...... | பலத்த சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | **விரோதி சைனியங்கள் கோட்டை.**—புர்யி (Burye). | ...... | ...... |
| | **விமானங்கள் இறங்கும் இடம்.**—அஸ்மாரா (Asmara). | ...... | தரையிலிருக்கும் விமானங்கள் நாசமாயின. |
| | **விரோதி மோட்டார் வண்டிகள்.**—ஹாபி மாண்டலு (Habimantel)க்கு சமீபம். | நஷ்டமில்லை. | பல மோட்டார் வண்டிகள் எரிந்துபோயின. |
| **4—3—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **பகலில்.**—விமானநிலயம்—ப்ரஸ்ட் (Brest). | ...... | 1 விமானம். |
| | **அல்பேனியா (Albania)** | | |
| | **இதாலிய யுத்தக்கப்பல்கள்.**—கிமாரா (Khimara), வலோனு (Valona). | ...... | 9 விமானங்கள். பல சேதமாயின. |

| தேதி. பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **4—3—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி. | | |
| முன்னேறும் பிரிடிஷ் துருப்புகளுக்குப் பக்க பலம்.—இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (Africa)வில் பல போர் முனைகளிலும். | …… | …… |
| வேவுபார்த்தல்.—அபிஸீனியா (Abyssinia) | …… | …… |
| **5—3—41.** (புதன்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| பகலில்.—கப்பற்துறைகள், துறைமுகம்:—புலாயின் (Boulogne). | …… 3 விமானங்கள். | பெரிய தீ மூண்டது. 1 விமானம். |
| படையெடுத்தல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வடபிரான்ஸ் (France). | …… | 7 விமானங்கள் நாசம். 1 விமானம் சேதம். |
| அட்லாண்டிக் (Atlantic) மகா சமுத்திரம். | | |
| பாது காத்தல்.—அட்லாண்டிக் மகாசமுத்திரம். | …… | 2 விமானங்கள். |
| **6—3—41** (வியாழக்கிழமை). | | |
| அல்பேனியா (Albania). | | |
| இதாலிய பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—டெபெலேனி (Tepeleni)க்கு வடக்கேயுள்ள லுசாட்டி (Luzati)க்கு வடக்கே. | நஷ்டமில்லை. | பலத்தசேதம். |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| துருப்புகள், பீரங்கிகள் வைக்கப்படும் இடங்கள், மோட்டார் வண்டிகள் ரஸ்தா சந்திப்புகள், ரயில்பாதைகள்.—கெரென் (Cheren) பிரதேசம். | …… | சேதமாயிற்று. |
| ஒரு பெரிய விமானம்:—ஸுலா (Zula) | …… | எரிந்துபோயிற்று. |
| சாமான் கிட்டங்கி:—அஸ்மாரா (Asmara) | …… | தீப்பிடித்தது. |
| பிரிடிஷ் துருப்புகளுக்கு பக்க பலம்:—இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (Africa) | …… | …… |

| தேதி. | பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; எதிரிகளின் விமான படையெடுப்புகளால் நஷ்டம், விளைந்த சேதமும். | |
|---|---|---|---|
| **7—3—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | இதாலிய சைனியங்கள், ராணுவ முக்கியமான இடங்கள்:—பெஸிஸ்ட் (Besist), டிராகோனி (Dragoni) கிராமங்கள். | ...... | பலத்த சேதம். |
| | படையெடுத்தல்.—அல்பேனியா (Albania) | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ரயில்பாதைகள் ரஸ்தா சந்திப்புகள்.—கெரென் (Cheren) பிரதேசம். | ...... | ...... |
| | பக்க பலம்.—இதலிய கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள பிரிடிஷ் துருப்புகள். | ...... | ...... |
| | துறைமுகம்.— ட்ரிபோலி (Tripoli) ... | ...... | ரயில் பாதை சேதம். |
| | விமான நிலயங்கள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania). | நஷ்டமில்லை. | சேதமாயிற்று. |
| **8—3—41.** (சனிக்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | இதாலிய சைனியங்கள் மோட்டார் வண்டிகள்.—டெபெலேனி (Tepeleni) பிரதேசம், க்ளாவா (Glava)–புஸி (Buzi) ரஸ்தா. | ...... | பலத்த சேதம், பலருக்குக் காயம். |
| | துறைமுகம்.—டுராஸோ (Durazzo) ... | ...... | தீப்பிடித்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ஹாரார் (Harar) ... ... | ...... | ...... |
| | இதாலிய துருப்புகள்.—கெரென் (Cheren) பிரதேசம், கெரென் (Cheren)—அஸ்மாரா (Asmara) ரஸ்தா. | ...... | ...... |
| | 2 எண்ணெய் கிடங்குகள், ஒரு மோட்டார் லாரி.—அஸ்மாரா (Asmara)விற்குத் தெற்கே. | நஷ்டமில்லை. | தீப்பிடித்தது. |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) ... | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், விமானப்படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **8—3—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | விமான நிலயங்கள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania). | ...... | ...... |
| | ரிபேர் செய்யுமிடம்.—டிகாமெரி (Decamere) ரஸ்தா. | ...... | ...... |
| | ரயில்பாதை.—ஹாபிமாண்டல் (Habimantel). | ...... | ...... |
| **9—3—41.** (ஞாயிற்றுக்கிழமை.) | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | பாது கார்த்தல்.—அல்பேனியா (Albania). | 1 விமானம்; ஆனல் விமானி பத்திரம். | 7 விமானங்கள்; பல சேதமாயின. |
| | டுகாய்.—(Dukai) கிராமம் ... | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள், பீரங்கிகள் வைத்திருக்கும் இடங்கள்.—டுகாய் (Dukai) பிரதேசம். | ...... | பலத்த சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துருப்புகள்.—கெரென் (Cheren) பிரதேசம். | ...... | பலருக்குக் காயம். |
| | விமான நிலயம்.—டிரிடாவா (Diredawa) | ...... | சேதமாயிற்று. |
| | ஊரை நோக்கி வரும் ஒரு ரயில் வண்டி, பட்டணம்.—அட்ட கல்லா (Adda Galla). | ...... | ரயில் வண்டிமேல் குண்டு வீழ்ந்தது. |
| | இதாலிய சைனியத்தை ஹிம்சை செய்தல்.—புர்யி (Burye) லிருந்து பின்னேறும் சைனியங்கள். | ...... | ...... |
| | ஒரு கிராமம்.—அபிஸீனியா (Abyssinia) வில் டெப்ரா மார்கோஸ் (Debra Markos). | ...... | தீப்பிடித்தது. |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும், படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **3—3—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | விமானச் சண்டை.—கார்ப்பூ (Corfu). | 5 விமானங்கள். | நஷ்டமில்லை. |
| | **ஸூயஸ் (Suez) கால்வாய்.** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | ...... | சேதமில்லை; ஒருவருக்கும் காயமில்லை. |
| **4—3—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—பிரிஸ்டல் (Bristol). கால்வாய் தென் வேல்ஸி (Wales)ல் ஒரு பிரதேசம்; தெற்குக் கடற்கரையில் சில இதர இடங்கள்; தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம். | 3 விமானங்கள். | சில இடங்களில் தீப்பிடித்து, உடனே அணைத்து விட்டார்கள். சொற்பசேதம் சிலருக்குக் காயம். |
| **5—3—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | பகலில்.—விமான நடமாட்டமேயில்லை. | ...... | ...... |
| | இரவில்.—இங்கிலாந்தி (England) ன் தெற்குக் கடற்கரையில் ஒரு இடம். | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 16 விமானங்கள். | ஒரு விமானம்; கட்டடங்களுக்குச் சேதம். |
| **6—3—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). கெண்ட் (Kent), லண்டன் (London) பிரதேசத்தில் ஒரு இடம். | ...... | சொற்பசேதம்; சிலருக்குக்காயம். |
| | இரவில்.—மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம்; இன்னும் சில இதர இடங்கள். | ...... | சேதமேயில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | | சொற்பசேதம். |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **7—3—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—துணைகாவல் கப்பல்கள்.— வடகடல் (North Sea). | 1 விமானம். | நஷ்டமுமில்லை. சேதமுமில்லை. |
| | ஒரு இடம்.—வடகிழக்கு ஸ்காத்லாந்து, (Scotland), மிட்லண்ட்ஸ் (Midlands), கிழக்குக் கடற்கரையில் பல இடங்கள். | ...... | சொற்பசேதம். பலருக்குக்காயம். சிலர் கொல்லப் பட்டனர். |
| | இரவில்.—அங்குமிங்கும் விமான நடமாட்டம் இல்லை. | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா.—(Malta) ... | பல விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். |
| **8—3—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்குக் கடற்கரையில் சில இடங்கள். | 4 விமானங்கள். | ...... |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம், தெற்கு, தென்மேற்கு இங்கிலாந்தி (England)ல் பல இடங்கள், கிழக்கு கவுண்டீஸ் (Counties). | ...... | தீப்பிடித்தது. பலருக்குக்காயம். சொற்பசேதம். சிலருக்குக்காயம். |
| **9—3—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | பகலில்.—தென்கிழக்கு கடற்கரையில் ... | ...... | மிகச் சொற்ப சேதம். |
| | சில இடங்கள்.—கிழக்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு இடம். | | சிலருக்குக் காயம். சிலர் மாண்டனர். |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம், இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில் பல இடங்கள். | ...... | பல இடங்களில் சேதம். சிலருக்குத்தான் காயம் |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 10—3—41. (திங்கட்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), தென்கிழக்கு இங்கிலாந்து (England). | …… | சேதமேயில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | இரவில்.—போர்ட்ஸ்மத் (Portsmouth) பிரதேசம், ஒரு பட்டணம் தெற்குக் கடற்கரை. வேல்ஸ் (Wales). | …… 5 விமானங்கள். | பலத்த சேதம். சிலருக்குக் காயம். |

---

# யுத்தக் குறிப்புகள்.

## கப்பல்களைப்பற்றி உண்மையான விவரங்கள்.

மனத்தளர்ச்சியடைகிறவர்கள் நமது கப்பல் நிலையைப்பற்றி குறைவாக நினைக்கிறார்கள். இதற்கு ஜெர்மன் பிரசாரமும், அமெரிக்க சட்ட சபையோர்கள் செய்யும் வாதமும் ஒரு அளவிற்குக் காரணம்; ஆயினும், அறியாமையும் ஒழுங்காய்க் கணக்கெடுத்துப்பார்த்து முடிவிற்கு வருவதில் அசிரத்தையுமே முக்கிய காரணம். ஆகையால், ஒரு கோரமான யுத்தம் துவங்கி 18 மாதமாகிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, சென்ற யுத்தத்தில் நமது நிலையுடன் ஒத்துப்பார்த்து இந்த யுத்தத்தின் அடிப்படையான விஷயங்களைவைத்து கவனிப்போம்.

| | 1917-ல் | 1940-ல் |
|---|---|---|
| (a) | இதாலி, ஜப்பான், பிரான்ஸ் கப்பற்படைகளும், பின்னால் அமெரிக்காவின் கப்பற்படையும் நமக்குத் துணையாயிருந்தன. | போக்குவரத்து காபந்து வேலையும், தேச பாதுகாப்பும் மத்தியதரைக்கடலில் நமது ஆதிக்கம் குறையாமல் கவனிப்பதும், பிரிடிஷ் கப்பற்படை தனிமையில் பார்க்கவேண்டியிருக்கிறது. |
| (b) | 1939-லிருந்ததைக்காட்டிலும் பெரிய வியாபாரக் கப்பல்கள் இருந்தன. போர் முழுமையும் அமெரிக்க வியாபாரக் கப்பல்களின் பிரயோஜனம் நமக்கிருந்தது. | நமக்கு அயர்லாந்தில் நாசகாரி நிலயங்களில்லை; ஜெர்மானியருக்கோ, ஸ்காண்டிநேவியா முதல் பிஸ்கே வளைகுடாவரை கடற்கரை சுவாதீனம் இருக்கிறது. |

| | |
|---|---|
| (c) ஸ்கான்டிநேவியா, கால்வாய், அட்லாண்டிக் கடற்கரைகளில் ஜெர்மனிக்கு நாசகாரி நிலயங்கள் கிடையாது. | ஆகாயமார்க்கம் வெடிகுண்டு தனிமையிலோ யூ-படகுகளுடன் சேர்ந்தோ போடுவதாலுள்ள அபாயம் இப்போது வெகு ஜாஸ்தி. |
| (d) கடலில் வியாபாரக் கப்பல்களுக்கு தூரசஞ்சாரமுள்ள வெடிகுண்டு போடும் விமான எதிர்ப்பு கிடையாது. | நடுநிலைமை நாட்டாரிடமிருந்து கிடைக்கும் சாமான்களை முன்னே காட்டிலும் ஜாஸ்தி தூரம் காபந்துடன் நாம் அழைத்துச்செல்ல வேண்டியிருக்கிறது. |
| இப்படியிருந்தும் நேசதேசத்தாருக்கும் நடுநிலைமையார்களுக்கும் கப்பற் சேதம் 62,35,000 டன்கள். | இப்படியிருந்தும் நேசதேசத்தாருக்கும் நடுநிலைமையாருக்கும் கப்பற் சேதம் 35,91,000 டன்கள். |

சுருங்கச்சொல்லின், சென்ற யுத்தத்திலிருந்ததைக் காட்டிலும் தீவிரமான நாசகாரி எதிர்ப்பு இருந்தபோதிலும், 1917-ல் நேர்ந்ததைக் காட்டிலும் பிரிடனுக்கு சேதம் வெகு குறைவு.

## முக்கியமான குறிப்புகள்.

இரண்டு மாதங்களாக, மேலே சொன்ன தொகைகளின் மாத சராசரிக்குக் குறைவாகவேயிருக்கின்றன பிரதி வார நஷ்டமும் சேதமும். ஆனால், எப்போதும் இப்படியேயிருக்குமென்று நாம் நம்பி மோசம் போகக்கூடாது. வேனிற்காலம் நெருங்கநெருங்க சேதம் ஜாஸ்தியாகக்கூடும். இதை எதிர்பார்த்து நாம் தயாராகயிருக்கிறோம்; சில விஷயங்களை நாம் மனதில் வைத்துக்கொண்டால் திருப்திகரமாக விருக்கும்.

1. இதுவரை நேர்ந்ததிலும் ஜாஸ்தி கப்பல் சேதம் ஏற்பட்டாலும் பிரிடன் யுத்தத்தை எப்போதும்போல் நடத்தலாம்; ஏனென்றால், நேரக்கூடிய சேதத்திற்கு ஈடு பண்ணும்படி கையிலும் கட்டப்பட்டுக்கொண்டும் ஏராளமான கப்பல்கள் இருக்கின்றன.

2. சில சமயங்களில் சேதம் ஜாஸ்தியாயிருந்தபோதிலும், பிரிடனில் கட்டப்பட்டு வரும் கப்பல்களென்ன, அமெரிக்காவிலிருந்து வரும் கப்பல்களென்ன, இவைகளையெல்லாம் கொண்டு பார்த்தால், சென்ற வருஷ சராசரிக்கு மேல் சேதம் ஏற்படாது.

3. கப்பல் பலத்தின் பயனென்னவென்றால், உணவு சாமான்களும், யுத்த தளவாடங்களும், வரக்கூடுமென்பதுதான். சேதம் ஏற்பட்ட போதிலும் வேண்டிய அளவிற்கு இவ்வித இறக்குமதிகள் வந்துகொண்டேயிருக்கின்றன. மேலும், இவைகளில் நமக்குள்ள கையிருப்பானது 1917-லிருந்ததைக் காட்டிலும்

ஜாஸ்தியாக இருக்கிறது. இறக்குமதி குறையும் வரை அவைகளைத் தொடமாட்டோம்; அவை குறையாமல் இருக்கும் வரை நமது முயற்சி கொஞ்சமேனும் தடைப்படாது.

## அந்நாஸி.

அடியிற் குறிக்கப்படும் குறிப்புகள் முன்னமேயே சொல்லப்பட்டிருந்தபோதிலும், கப்பல் நிலை திருப்திகரமாகவே இருக்கிறது என்று எடுத்துக்காட்ட மறுமுறை சொல்லலாம்.

(a) சென்ற 4 மாத காலமாக யுத்தத் தளவாடங்களென்ன, இவைகளுக்கு வேண்டிய இரும்பு என்ன, விமான, போக்குவரத்து யந்திரங்களின் அங்கங்கள் என்ன, இவைகளுக்கு கப்பல்களில் இடங்கொடுத்து உணவுப்பொருள்கள், மற்ற சாமான்கள் முதலியவைகளுக்கு இடம் குறைக்கிறார்கள். சவில் சாமான்களிற்கு இடம் ரொம்பக் குறைவு. டிஸெம்பர் மாத இறக்குமதி கணக்கு இதை நிரூபிக்கிறது.

(b) துறைமுகங்களில் முக்கியமாக அமெரிக்க துறைமுகங்களில பத்து-லக்ஷம் டன் உள்ள டென்மார்க்கைச்சேர்ந்த கப்பல்கள் வேலையில்லாமல் கிடக்கின்றன.

(c) கனடாவில் 18 பெரிய கப்பல்கள் கட்டுகிறார்கள். அவைகள் குறைந்த பக்ஷம் 2½-லக்ஷம் டன் கனமுள்ளவையாயிருக்கும்.

(d) 200 பெரிய கப்பல்கள் கட்ட அமெரிக்கா தீர்மானித்துவிட்டது. சும்மா வேலையின்றி பதுங்கிக் கிடப்பதற்காக இல்லையென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம்!

(e) போர் நடவாத இடங்களில் உபயோகப்படுத்தி போரில் பிரிடிஷ் கப்பல்கள் சேரும்படி, நடுநிலைமையார் கப்பல்களை நாம் உபயோகப்படுத்த பேச்சுக்கள் பூர்த்தியடையும் நிலையிலிருக்கிறது.

இத்துடன் சேர்த்துப்பாருங்கள், பிரிடனிலும் 'டொமினியன்' களிலும் கப்பல் கட்டுவது அதிகரித்துவிட்டது. நஷ்ட ஈட்டிற்காக வேண்டிய 20 லக்ஷம் டன் கனமுள்ளதும் பயந்த சுபாவமுள்ளவர்கள் மனம் சோர்வடையக் காரணமானதுமான சேதத்திற்கு வெகு சீக்கிரம் ஈடு செய்துவிடுவோம் என்பது நிச்சயம்.

## சட்ட நிர்ணயத்தில் பெரிய சம்பவம்.

எழுத்துமூலம் நிர்ணயிக்கப்படாத பிரிடிஷ் அரசியல் முறையானது நான் சிறு பிள்ளையாய் இருந்தபோது சரித்திர மாணாக்கர்களுக்கு புதிர் போட்டதுபோல் இருந்தது. அமெரிக்காவில் கொண்டுவந்த குத்தகை-கடன்-மசோதாவின் போக்கை கவனித்தால் சில முக்கியமான விஷயங்கள் புலப்படுகின்றன. இங்கிலாந்தில் காமன்ஸ் சபையல்லவா முக்கியமான சபை? பிரபுக்கள் சபை பக்கவாத்தியம்தான். அமெரிக்காவிலோ, ஜனப்பிரதிநிதி சபையானது பெரியசபை

யவ்வளவு முக்கியமல்ல. பொது ஜனங்களுக்கு, பிரிடனுக்கு உதவிபுரியவேண்டி கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவில் பற்றில்லாவிட்டால், பெரியார் சபை இதைத் தள்ளியேயிருக்கும்.

## பெரிய சபையின் செல்வாக்கு.

இந்த மசோதா நிறைவேறியதென்றால் அது கேவலம் கட்சி தந்திரத்தாலல்ல. முக்கியமாக இவ்வளவு விஷய புஷ்டியுள்ள மசோதா அப்படி நடைபெறக்கூடியதல்ல. அமெரிக்க பெரிய சபைக்கு எல்லா தேசபத்திரிகை வர்க்கத்தாரிடம் வெகு செல்வாக்கு உண்டு. பிரதிநிதி சபைபோல் கட்சிகளால் ஆட்டிவைக்கக்கூடிய சபையல்ல. அதிகார வர்க்கத்திற்குக் கட்டுப்படாதது; அந்நிய இலாகா விஷயங்களில் ஜாஸ்தி அக்கரை கொண்டது; அது ஏனென்றால், அந்நிய தேசத்தாருடன் செய்யப்படும் உடன்படிக்கையெல்லாம் பெரிய சபையில் 3-ல் 2 பாகத்தார் ஆமோதிக்கவேண்டியது. ஆகையால் வாதம் செய்வதில் காலவரையில்லாததும், கொண்டுக் கட்சிகள் இழுத்துவிட்டு மசோதாக்கள் நிறைவேறாமல் செய்யப்படக்கூடிய அச்சபையில் அந்நிய தேச சமாசாரங்களில் நிபுணர்கள் மெம்பர்களாயிருப்பதும் அவர்கள் அபிப்பிராயங்கள் கேட்கப்பட வேண்டியதும் அவசியமென்பது வெளியாகும்.

## யுத்தம் அவசியமானால்!

இந்த மசோதா சம்பந்தமான பிரசங்கங்கள் கடுமையாகயிருந்தன; ஏனென்றால், ஜனநாயக ஆட்சியில் அமெரிக்கர்களுக்கு விசேஷப்பற்று; அதில் இருந்து உலகத்தில் அதிகாரம் வலுத்த அரசியல் அதிகாரிகளில் முதன்மையாக இருக்கும் ஆவல்கொண்டவரென்று மதிக்கப்பட்ட பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்டிற்கு இந்த மசோதாவின் பயனாக ஏராளமான அதிகாரம் கிடைத்துவிடுமோ என்ற பயம். முக்கியமாக, ஜப்பான் போடும் ஆட்டத்தின் பயனாகவே, அவர் அமெரிக்காவைச் சண்டையில் இழுத்துவிடுவாரோ என்ற பயமானது இப்போது கொஞ்சம் மாறிவிட்டது; அமெரிக்கர்கள் அபிப்பிராயமும் "யுத்தம் ஒன்று நீங்கலாக மற்ற எல்லா வழிகளிலும் இங்கிலாந்திற்கு உதவி செய்யவேணும்" என்ற கொள்கை விலகி, "இங்கிலாந்து தப்பிக்க யுத்தம் அவசியமானால் சண்டைக்குப் போகலாம்" என்ற கொள்கை வந்துவிட்டது.

## சம அந்தஸ்தும் சுயேச்சையும் உள்ள கூட்டுக்காரர்கள்.

ஜெர்மனியுடன் கூட்டென்றால் நன்றாய்த் தோன்றுகிறது. அதனுடன் சேர்ந்து ஜயபேரிகை படித்து செல்லலாமென்கிறார்கள்; உங்கள் சிநேகிதம் இணை பிரியாதது என்கிறார்கள்; உங்கள் நோக்கங்கள் ஒரேவிதமானதும், நன்மை பயக்கக்கூடியதும், ஆட்சேபிக்க முடியாததும் என்கிறார்கள்; ஜெர்மனியுடன் சம அந்தஸ்தும் சுயேச்சையுமுள்ள கூட்டுக்காரராயிருப்பதின் பெருமை இதாலியருக்குத் தெரியும். அந்தக் கூட்டினால் விளைந்த பலன்களை கவனியுங்கள்!

1. இதாலிய ஆபிரிக்கா சாம்ராஜ்ஜியம் போய்விட்டதென்று முஸோலினி அநேகமாய் ஒத்துக்கொண்டு விட்டார்; ஆபிரிக்காவிலுள்ள மற்ற இதாலிய

துருப்புகள் தப்பிக்க வழியில்லையென்றும் ஒப்புக்கொண்டுவிட்டார். இருந்த போதிலும் அவர்கள் விடமுடியவில்லை; ஏனென்றால், நம்முடன் போர்புரிந்த வண்ணமாக விருந்தால் நமது துருப்புகளில் சிலவற்றிற்கு வேலையிருக்கும்; அந்த அளவிற்கு ஜெர்மானியருக்குச் சொற்பசாதகம்.

2. ஆனால், இதற்கு பதிலாக ஜெர்மானியர்களோ பெங்காஸி முதலிய பிடிக்கப்பட்ட ஊர்களில் இதாலிய புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் பேரில் குண்டு போட்டுக்கொல்லுகிறார்கள்.

3. அமெரிக்கர்கள் சொல்லுவதைக் கேட்டால் இதாலி மேலும்மேலும் ஜெர்மானியர் ஆக்கிரமண நாடாகி வருகிறது. அங்கேயும் ஸிஸிலியிலும் பிரிடிஷார் ஆகாயம், கடல், தரை இவைகளில் செய்யும் தாக்கல்களால் ஜெர்மானியரைக் காட்டிலும் இதாலியருக்கு ஜாஸ்தி ஆபத்து.

4. இதாலிய சாம்ராஜ்ஜிய நாடுகளில் இதர இடங்களையும், தங்கள் உடமை போல ஜெர்மானியர் உபயோகித்து வருகிறார்கள். ரிப்பண்டிராப் சொல்லுகிறபடி ஒத்துக்கொண்டால் அல்பேனியாவில் ஒரு நல்லபாகம் யூகோஸ்லாவியாவுக்கு கொடுக்கப்படும்.

5. Dr. க்ளோடியஸ் என்ற நாஜி செல்வ இலாகா பிரமுகரின் அபிப்பிராயத் தால் இதாலியர் தைரியப்படமாட்டார்கள். இதாலியரால் பணநெருக்கடிதான் மிச்சமென்றும், ஜெர்மனிக்கு அனுப்பும் ஏற்றுமதி சரக்குகளான பழம், காய்கறி, ரஸம், கந்தகம், சணல், மோடா பட்டு அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் (பழம், காய்கறி, அரிசி இவைகளில் இதாலியருக்கு பாதி அம்சம் குறைத்துவிட்டார்கள்) கணக்கு கடைசியில் பார்த்துக்கொள்ளலாம் என்றும் அவர் சொல்லுகிறார். ஜெர்மனி யுத்தத் தளவாடங்கள், ஆள், விமானங்கள், இப்போதிய தேவைக்காக அனுப்பியபோதிலும், இதாலி அனுப்பும சரக்குகளுக்கு—அவற்றில் 90 சதவிகிதம் ஜெர்மனிக்கு மிகவும் அத்யாவசியமானது—பணத்திற்கு வாயை வீணாகத் திறக்க வேண்டியதுதான் (இதாலியால் அனுப்பக்கூடிய—'கூடிய' என்பதை கவனியுங் கள்).

இதாலியில் பாஸிஸ்ட் தலைவர்களில் சிலர் திமிறுகிறார்கள் என்றால், அதில் ஆச்சரியம் என்ன? கப்பற்படை இலாகா மந்திரி அட்மிரல் ரொகார்டி மெரானோ வில் பிப்ரவரி மத்தியில் சொன்னார். இதாலிய கப்பற் படையை மத்தியதரைக் கடலில் உபயோகப்படுத்துவதால் பிரயோஜனப்படாது, செலவுங்கூட என்றும் அதனால் அட்மிரல் ரீடர் கேட்கிறபடி மத்தியதரைக்கடலில் உபயோகப்படுத்த முடியாது என்று சொன்னார். அதாவது, பிரிடன்பேரில் படையெடுத்து தங்களாலானதை ஜெர்மானியர் முதலில் பார்க்கட்டும், என்று இதாலியர் சொல்லுகிறார்கள்.

## பால்கன் நாடுகளில் ஜெர்மனியின் ராஜீய, பொருளாதார தந்திரங்கள்.

## நாஜிகள் கிரீஸ் தேசத்தைத் தாக்குவார்களா?

## அச்சுநாடுகளுக்கு எதிர்ப்படையாயிருக்கும் சங்கடங்கள்.

### சங்கியையின் மிகுதியால் மட்டும் பிரயோஜனமில்லை.

மேஜர் ஜெனரல் ஸர் சார்ல்ஸ் க்வின் எழுதியது.

ஆயுதங்கள் தரித்த ராணுவப்படைகளை உபயோகிப்பதைக்காட்டிலும் தந்திரத்தினால் ஏராளமான சாதனங்களை அடையக்கூடும். அதன் ராஜீய, பொருளாதார பாகங்களைக்கொண்டு நவீன யுத்தங்களில் ராணுவ உபயோகத்தால் அடையக்கூடிய பிரயோஜனத்தைக் காட்டிலும் அதிகமாக லாபத்தை அடைந்துவிடலாம். இந்த மூன்று அம்சங்களும் நெருங்கி ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சேர்த்து பிரயோகிப்பதில் ஹிட்லர் மஹா நிபுணன்.

இதற்கு உதாரணம்:—பால்கன் நாடுகளிலிருக்கும் யுத்தாங்கம்தான். இங்கே ஒரு விபத்தான நிலைமை ஏற்படும்போலிருக்கிறது.

ஜெர்மானியர்கள் ருமேனியாவை ஆக்கிரமித்ததற்குக் காரணம், முக்கியமாக அங்கேயிருக்கும் எண்ணெய் உற்பத்திசாலைகளின் வியாபாரத்தையும் மற்ற உணவுப் பொருள்களையும் ஜெர்மனியின் திட்டத்திற்கு உட்படுத்துவதற்குத்தான். இதனால் ருமேனியாவைப்பற்றி ருஷ்யா எண்ணிக்கொண்டிருந்த ஏற்பாடுகளெல்லாம் நிறுத்திவைக்கப்பட்டன. பிரிடன், துருக்கி இவைகளின் ஒத்தாசையின்பேரில் ஜெர்மனிக்கு எதிரிடையாக ஒரு கக்ஷியை ஏற்பாடுசெய்வதாக உத்தேசித்ததெல்லாம் கவிழ்ந்துவிட்டது.

ஒன்று நிச்சயமாய் இப்பொழுது விளங்குகிறது. ருமேனியாவை ஜெர்மனி ஆக்கிரமித்ததின் நோக்கம், மேற்கேயிருந்து எகிப்துக்குள் இதாலியர்கள் படையெடுக்கும் காலத்தில், துருக்கியிலும், இராக்கிலுமுள்ள எண்ணெய் நிலயங்களிலும், எகிப்திலும் ஜெர்மனி யுத்தம் ஆரம்பிக்கவேண்டுமென்று எண்ணியிருந்ததென்று சொல்ல இடமில்லை.

ராணுவ யுத்தத்திற்கு வேண்டிய ஒரு நிலயம் அதிலிருந்து ஏற்பட்டது. முக்கியமாக, அது ராஜீய, பொருளாதார தந்திரத்தின் அறிய போக்கு என்று சொல்லலாம்.

இதாலிக்கு நேர்ந்த அபஜயத்திலிருந்து ஜெர்மனியின் யுத்த தந்திரத்தைத் திருத்தி அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவனுடைய நேசனாகிய இதாலிக்கு ஒத்தாசை செய்ய ஜெர்மனி முன்வரவேண்டியதாயிற்று. இதாலி முற்றிலும் தோற்கடிக்கப்பட்டுவிட்டால் பிரிடனுக்கு மத்தியதரைக்கடலில் பூர்ணமான ஆதிக்கம் ஏற்பட்டு, மத்தியதரைக்கடல் மறுபடியும் பிரிடனுடைய முக்கிய

மான போக்கு வரவு ஸாதனமாக மாறிவிடும். பிரயாணம் செய்யும் நாட்களைக் குறைப்பதென்பது, பிரிட்டனுடைய கடற்படைக்கு அநேக கப்பல்களைக் கொடுப்பதற்கும் அதன்மூலம் பிரிட்டனுடைய வியாபாரக்கப்பல்களை விருத்திசெய்வதற்கும் சமானமாகும்.

இப்பொழுதுங்கூட, பலத்தை உபயோகப்படுத்துவதைவிட வெருட்டல்களால் தன்னுடைய இஷ்டங்களை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று ஜெர்மனி நினைத்திருக்கிறது.

ருமேனியாவிலுள்ள தன்னுடைய சேனையின் பலத்தை அடிப்படையாக வைத்து பல்கேரியாவையும் யுகோஸ்லாவியாவையும் ஜெர்மனி பயமுறுத்துகிறது. ஆனாலும் கிரீஸுடன் ஜெர்மனி யுத்தம்செய்ய ஆரம்பிக்கவில்லை.

இதாலியுடன் சமாதானம் செய்துகொள்ளும்படி கிரீஸை வற்புறுத்தி, அதிலிருந்து பலாத்காரமாக கிரீஸில் படையெடுக்காமல் கிரீஸ் தேசத்துக்குள் ஜெர்மனி புகுந்து அதை தன் உபயோகத்துக்குள்ளாக்குவதுதான் ஹிட்லருக்கு சாவதானமான முறை.

துருக்கிக்கும் பிரிட்டனுக்குமுள்ள ஒப்பந்தத்தை ரத்துசெய்யும்படி துருக்கியையும் வெருட்டிவிடலாமென்று ஜெர்மனி நினைக்கக்கூடும். நாம் நிச்சயமாய் எதிர்பார்க்கிறபடி கிரீஸும், துருக்கியும் இந்த ஜெர்மானிய வெருட்டல்களுக்குப் பயப்பட்டு இணங்காவிட்டால் தன் சேனு பலத்தை உபயோகிக்க ஜெர்மனி தயாராகயிருக்கிறது. கிரீஸின்மேல் படையெடுப்பதும், துருக்கியை தாக்குவதும் சுலபமான சமாசாரமல்லவென்று ஜெர்மனிக்கு நன்றாய்த் தெரியும்.

பால்கன் நாடுகளில் மாரிகாலத்தில் செய்யவேண்டிய யுத்தத்தில், தன் சேனு பலத்தை உபயோகப்படுத்த ஜெர்மனி மறுத்துவிட்டது. ஆகையால், இதாலியின் உதவிக்காக ஜெர்மனி தீவிரமாக வருவதற்குள்ளாக, இதாலி பின்னும் அநேக கஷ்டங்களுக்கு உள்ளாகாமல் தப்பிக்கமுடியுமாவென்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது.

அல்பேனியாவில் இதாலிக்கு யாதொரு வலுவுமில்லாமல் கிரீஸ் செய்துவிட்டால், ஜெர்மானியர்களின் எதிர்ப்பு பிறகு நேர்ந்தாலும் அதை எதிர்த்து நிற்கப்போதுமான ஸாதனங்களை கிரீஸ் அதிகப்படுத்திக்கொள்ளக்கூடும்.

கிரேக்க வெற்றிகளின் பயனுக யுகோஸ்லாவியர்களும் ஜெர்மனியின் வெருட்டலை திடமாக நிராகரித்துவிட்டால், கிரீஸின் நிலைமை இன்னும் அதிக வலுவடைந்துவிடும். கிரீஸுக்கு ராணுவ எதிர்ப்பிலிருந்து ஏற்படக்கூடிய அபாயங்களாவன :—

முதலாவது, இதாலியர்கள் மறுபடியும் எதிர்ப்பு யுத்தம் ஆரம்பிப்பார்கள். யுகோஸ்லாவியா ஆக்ஷேபணை செய்யாதபோனல் யுகோஸ்லாவியாவின் தென்மேற்கு பாகம் வழியாகவும் மொனஸ்டிர் வழியாகவும் முன்னேறி ஸலோனிகாவுக்குச்செல்ல முயலுவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு இதாலியர்கள் பின்புறமாக

வெகுதூரம் விரட்டப்படுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு இந்த அபாயம் குறைந்துகொண்டேவரும். கிரேக்கர்கள் ராணுவ முக்கியமான நிலயங்களை ஏற்கனவே வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிக வலுவுடன் இல்லாத போனாலும் ஸலோனிகாவுக்குச் செல்லக்கூடிய மார்க்கங்களை எல்லாம் நன்றாய்ப் பாதுகாத்து வருகிறார்கள்.

இரண்டாவது, வார்தார் பள்ளத்தாக்கு வழியாக ஸலோனிகாவுக்கு ஜெர்மனி செல்லுவது. இதுவும் யுகோஸ்லாவியாவின் சம்மதத்தின் பேரில்தான் நிறை வேறக்கூடியது.

மூன்றாவது, பல்கேரியா வழியாகச்சென்று ஸலோனிகா, கிழக்கு மாஸிடோனியா, திரேஸ் இவைகளை ஜெர்மனி தாக்குவது. எல்லைப்புறம் வரும் வரையில் ஸ்ட்ருமா பள்ளத்தாக்கு, போக்குவரவுக்கு நன்றாய் உபயோகப்படக் கூடிய இருப்புப் பாதைகளையும், ரஸ்தாக்களையும் உடைத்ததாயிருக்கிறது. எல்லைச்சாகத்தில் ஒரு கணவாய் வழியாகச் செல்லவேண்டியிருப்பதால் இவ்விடத்தில் பலமான பாதுகாப்பு நிலயமிருக்கிறது. அதற்கு அப்பாலுள்ள வழிகளெல்லாம் மிகவும் கஷ்டமானவைகள்.

தன்னுடைய நாடுகளை உபயோகிக்கவேண்டி ஜெர்மனி செய்யும் முயற்சிகளை யுகோஸ்லாவியா நிராகரித்துவிட்டால் அப்பொழுது அச்சுக்காரர்கள் படைகளுக்கு படையெடுப்புக்கு லாயக்கான மார்க்கங்கள் குறைந்து விடுவதோடு சுலபமான மார்க்கங்களும் சிக்கனமடைந்துவிடும். மேலும், சங்கியையின் அதிகத்தினாலும் கூட்டுறவினாலும் வெற்றிபெறக்கூடிய சந்தர்ப்பங்களும் குன்றிவிடும்.

பல்கேரியா வழியாகச்சென்று படையெடுக்க முயற்சி செய்வதற்குமட்டும் அநேக இடையூறுகள் நேரிடக்கூடும். பால்கன், ரொடோம் மலைகளையும் ஸ்ட்ருமா, வார்தார் பள்ளத்தாக்குளின் கீழ் பாகங்களிலுள்ள மலேரியா வியாதி மிகுந்த சதுப்ப நிலங்களையும் கடக்கவேண்டிய அவசியம் ஏற்படும்.

ருமேனியாவிலுள்ள ஜெர்மனியின் சைனியங்களும், நிலயங்களும், எண்ணெய்க் கிடங்குகளும், விமானத்திலிருந்து தாக்குவதற்குச் சுலபமான லக்ஷ்யங்களாகிவிடும். பக்கத்தில் இருக்கும் துருக்கியிலிருந்து அதிகமான அபாயம் ஏற்படக்கூடும்.

கிரீஸின் சத்துருக்களின் மேலானபலத்திலிருந்து எதிர்பார்க்கிறபடி கிரீஸின் தற்கால நிலைமை அவ்வளவு அபாயகரமென்று சொல்லமுடியாது.

தன்னுடைய தாந்திரீக பலத்திற்கு யுகோஸ்லாவியாவும் துருக்கியும் வசமாகாவிட்டால், ராணுவ பலத்தை உபயோகப்படுத்த ஜெர்மனியானது கடைசித் தருவாயிலும் தயங்குமென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

ஜெர்மனியின் முக்கியமான சத்துரு பிரிடன். கிரீஸூடனும் யுத்தம் ஆரம்பித்தால் ஜெர்மனியின் முக்யத்வம் வாய்ந்த ஏற்பாட்டுக்கு சிக்கல்கள் ஏற்படுவதோடில்லாமல் அதிக சௌகரியங்களும் ஏற்படாது. ஏனென்றால், விமானத்திலிருந்து தாக்கக்கூடிய அபாயங்கள் இருப்பினும், கிரேக்க தீவுகளின் ஆக்ரமிப்பையும், மத்தியதரைக்கடலில் அதற்கு இருக்கும் ஆதிக்கத்தையும் பிரிடன் விட்டுவிடாது.

## ஜெர்மனி தாக்குமா?

இராக்கிலிருக்கும் எண்ணெய்க்கிணறுகளையும், எகிப்தையும், ஜெர்மனி எதிர்ப்பதென்றால் சுலபமான காரியமல்ல. அவைகள் வெகு தூரத்திலிருப்பதுமல்லாமல் பெரிய சேனைகளை அழைத்துச்சென்று யுத்தம் செய்வது என்றால் சிரமசாத்தியமான காரியம். யுத்தம் நடந்துகொண்டிருக்கும் பொழுது எண்ணெய் இருக்கும் நிலயங்களை ஜெர்மன் படைகள் அடைந்தாலும், அங்கிருந்து கொண்டுபோகப்படும் எண்ணெய் ஸப்ளைகள் பிரயோஜனப்படும்படி சரியான காலத்தில் ஜெர்மனிக்குக்கொண்டுபோக முடியுமாவென்பது சந்தேகாஸ்பதமாயிருக்கிறது. இதற்குக் காரணம் சதியாலோசனையினால் ஏற்படக்கூடிய விபத்துகளும் எண்ணெய் ஏற்றிச் செல்லக்கூடிய சாதனங்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களும்தான்.

கிரீஸை முறியடித்து அதை ஆக்ரமிப்பதினின்றும் ஜெர்மனிக்கு விசேஷமான பிரயோஜனங்கள் ஏற்பட சம்பாவிதமில்லை. இருந்தாலும் அந்த வெற்றியிலிருந்து ஜெர்மனியின் சிறிய கூட்டாளியான இதாலிக்கு ஆசுவாஸம் ஏற்படக்கூடும்.

ஆகையால் ஜெர்மனியானது தன்னுடைய ராணுவபலத்தை உபயோகிக்கும்படி நேர்ந்தால், அதை அது மனதாரச்செய்ததாக நான் நினைக்கமாட்டேன்.

---

## பிரிடனும் ஐக்கிய நாடுகளும் தங்கள் கடற்படையை ஒன்று கூட்டுமா?

## வாஷிங்டனில் பேச்சுகள் நடப்பதாகச் செய்திகள்.

## மற்றொரு ஏற்பாடு: பிரிடனுக்கு இன்னும் சில நாசகாரிகளை அனுப்புவது.

டெயிலி மெயில் பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர் எழுதுகிறார்.

ஐக்கிய நாடுகளின் துரைத்தனத்தார், பிரிடனுக்கு இன்னும் சில நாசகாரிகளை விற்பனை செய்யவோ அல்லது கடனாகக்கொடுக்கவோ ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். முன்னதாக இல்லாவிட்டாலும் பிரிடனுக்கு உதவி செய்யும் கடன் மசோதா நிறைவேறி சட்டமாக ஆனவுடன்காலத்தில் இந்த தீர்மானம் வெளியிடப்படும்.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் இருபது நாசகாரிகளை பிரிடனுக்கு விற்பனை செய்யவோ அல்லது கடனாகக் கொடுக்கவோ தீர்மானித்து விட்டானென்று எனக்கு நிச்சயமாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த நோக்கத்தை பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டுடன் வெகுநேரம் பேசி விட்டு வந்த ஐக்கிய நாடுகளின் கடற்படைத் தலைவராகிய ஸ்டார்க் என்பவர் வெளியிட்டார். ரூஸ்வெல்டின் ஏற்பாட்டை எதிர்த்துப் பேசுபவர்களில் இந்த கடற்படைத் தலைவர் ஒருவர்.

இன்று அவர் பிரஸிடெண்டின் வீடான ஒயிட்ஹவுஸைவிட்டுப் புறப்பட்ட பொழுது "பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய கடற்படையின் நாசகாரிகளின் பலத்தை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் அதிகரித்து வருகிறது" என்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

கடற்படையின் காரியதரிசியான கர்னல் ப்ராங்க் நாக்ஸ் என்பவர் இனிமேல் நாசகாரிகளை பிரிடனுக்குக் கொடுக்கக்கூடாதென்று இன்னமும் ஆக்ஷேபிக்கிறார். அவருடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளும்படி அவரை ரூஸ்வெல்ட் வற்புறுத்துகிறாரென்று தெரிகிறது.

இது வரையில் அவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றப் போதுமான நல்ல காரணம் ஒன்றை அமெரிக்க துரைத்தனத்தார் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்பாராத வண்ணம் நாசகாரி கப்பல்கள் கட்டுவது அதிகமாக அபிவிருத்தியடைந்திருக்கிறதென்று வெளியிடக்கூடும். ஆகையால், இதுவரையிலிருந்ததைவிடக் குறைவான அபாயத்துடன் இம்மாதிரியான கப்பல்களை பிரிடனுக்கு அனுப்பக்கூடும்.

ஐக்கிய நாடுகளின் கவர்ன்மெண்டார் தங்களுடைய கடற்படையின் பலத்தை ஒன்றுகூட்டி அதன் மூலமாய் பிரிடனுடைய பெரிய கப்பல்களுக்குப் பதிலாக அமெரிக்காவின் லேசான க்ருயிஸர்களையும் நாசகாரிகளையும் கொடுக்கக்கூடிய ஒரு தீர்க்கமான ஏற்பாட்டைச்செய்ய விரும்புகிறார்களென்று தெரிய வருகிறது.

ஆனாலும், இந்த ஏற்பாடு நிறைவேற்ற முடியாததாக ஆகிவிடுமோ என்ற சந்தேகங்கள் உண்டாகுகின்றன.

## இரண்டு தேசத்தாருடைய ஒத்துமையான நோக்கங்கள்.

இந்த ஒன்றுசேர்த்தல் என்ற ஏற்பாட்டை ஐக்கிய நாடுகளின் துரைத்தனத்தைச் சேர்ந்த மெம்பர்களும், கடற்படை நிபுணர்களும் பிரிடிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் விரிவாக சர்ச்சை செய்திருக்கிறார்கள்.

இரண்டு தேசத்தார்களின் நோக்கங்களும் ஒன்றுபட்டு விட்டதென்ற அபிப்பிராயத்தின் பேரில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பொது நோக்கங்களாவன :—

(1) ஐக்கிய நாடுகளுக்கும் பிரிடனுக்கும் மத்தியில் இருக்கும் அட்லாண்டிக் கடல் பாதைகளை கட்டுப்பாடன்னியில் வைத்து அதன் மூலம், பிரிடனுக்கு அமெரிக்காவிலிருந்து வெடிமருந்துகளும் தளவாடங்களும் கொண்டுபோக வசதி ஏற்படுத்துதல்.

(2) பஸிபிக் மகாசமுத்திரத்தில் அமெரிக்காவின் கடல் பலத்தை அதிகப்படுத்தி ஜப்பானின் அதிக ஆசையை எதிர்ப்பது, அல்லது தடுப்பது.

பிரிடனுடையவும் அமெரிக்காவினுடையவும் கடற்படைகளின் அமைப்பினுல் இம்மாதிரி பரிவர்த்தனைகள் அவசியமென்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பஸிபிக் சமுத்திரத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு செய்யவேண்டியதற்கும், அவசியமானுல் அங்கே ஜப்பானை எதிர்ப்பதற்கும், அமெரிக்காவுக்கு சண்டைக் கப்பல்கள் தேவையாயிருக்கும். பிரிடனுக்கோவென்றால், சண்டைக் கப்பல்கள் அநேகமிருந்தாலும், வியாபாரக் கப்பல்களுக்கு துணைக்காவலுக்கு வேண்டிய நாசகாரிகள் க்ரூயிஸர்கள் போன்ற லேசான கப்பல்கள் அதிகமாகத் தேவை.

அநேக ஹேஷ்யங்களிலிருந்து இந்த பரிவர்த்தனை ஏற்பாட்டை எல்லோரும் ஆதரிக்கிறார்களென்று தெரியவருகிறது.

## கப்பற்படைகளின் சம்மேளனம்.

பத்திரிகை நிருபரான தளகர்த்தர் ஹ்யூ ஜான்ஸன் என்பவருக்கு ஐக்கிய சமஸ்தானங்களிலிருக்கும் ராணுவத்தில் அநேக ஸ்நேகிதர்களிருக்கிறார்கள். அவர் பின் வருமாறு எழுதுகிறார் :—

"இந்த பிரிடனுக்கு உதவிசெய்யும் கடன் மசோதா நிறைவேறிய உடன் காலத்தில் இது வரையில் கண்டிராத அல்லது கருதப்படாத வண்ணம் மிகவும் ஆச்சரியகரமாக பிரிடிஷ், அமெரிக்க யுத்த முஸ்தீபுகளின் உற்பத்தி ஏராளமாக உண்டாகப்போகிறதென்று நான் நினைக்கிறேன்.

நாம் இப்பொழுது எதிர் பார்ப்பதெல்லாம் ஆங்கில-அமெரிக்க தேசத்தாரின் கடற்படைகளின் சண்டைக் கப்பல்களின் சம்மேளனம்தான். இந்த மசோதா சட்டமானபொழுது இரண்டு கடற்படைகளும் ஒன்று சேர்ந்துவிடும். அத்துடன் அட்லாண்டிக் சமுத்திரத்திலும் பஸிபிக் சமுத்திரத்திலும் ஏராளமான கப்பல்கள் உலாவக்கூடும்."

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் வாஷிங்டனிலிருக்கும் முக்கிய நிருபரும், இன்று இம்மாதிரி ஒருங்கு சேர்வதைப்பற்றி வெகுகாலம் சர்ச்சை நடந்ததென்றும் ஆனுல், இதற்கு பதிலாக ஏற்பாடு செய்திருக்கும் ஆலோசனைதான் அநேகமாக நிறைவேறக்கூடுமென்றும் தெரிவிக்கிறார்.

• இந்த கிருபரின் அபிப்பிராயப்படி எல்லோரும் ஆதரிக்கக்கூடிய ஆமிலாசனைக்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. அவையாவன :—"முற்றுகையும் அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலிருக்கும் கடற்படையின் ஸ்திதியையும் கவனித்தால் பிரிடனுக்குச் சிறிய சண்டைக் கப்பல்கள், விசேஷமாக, க்ரூயிஸர்கள், நாசகாரிகள், சிறிய படகுகள் தான் தேவை. நம்முடைய பாதுகாப்புக்காக பிரிடிஷ் கப்பல்கள் உலாவிக்கொண்டும் வெற்றியுள்ளதாயுமிருக்கும் வரையில், நம்மிடமிருக்கும் மேலே சொல்லிய கப்பல்களின் அநேகத்தை பரிவர்த்தனையாக பிரிடனுக்கு நாம் கொடுக்கக்கூடும்.

மேலும், நாம் பிரிடனுக்கு விட்டிருப்பவைகளில் ஒன்ருயிருந்தாலும் சரி, அல்லது பிரிடன் கட்டிய கப்பலாகயிருந்து பிரிடனுக்கு உதவிசெய்யும் கடன் மசோதாவின் ஷரத்துக்கள்படி நம்முடைய கப்பல் கட்டும் துறைகளுக்கு சீர் திருத்தம் செய்யவேண்டி வந்ததாக யிருந்தாலும் சரி, ஒவ்வொரு பிரிடிஷ் நாசகாரிக்குப் பதிலாக நம்வசமிருக்கும் கப்பல்களில் ஒன்றை நாம் கொடுத்து விடலாம். இந்தப் பரிவர்த்தனை ஏற்பாடு, பிரிடனுக்கு நாம் ஒவ்வொரு மாதமும் ஐந்து அல்லது பத்து நாசகாரிகளை அனுப்பவேண்டுமென்று சொல்லும் மிஸ்டர் வெண்டல் வில்கியின் சிபார்சையும், நாம் ஒன்றும் அனுப்பக்கூடாது என்று சொல்லும் கர்னல் நாக்ஸின் அபிப்பிராயத்தையும் திருப்தி செய்கிறது."

## ஐக்கிய நாடுகளின் நாசகாரிகளின் சங்கியை.

ஐக்கிய நாடுகளின் கடற்படையில் இப்பொழுது 204 நாசகாரிகள் கட்டப் பட்டுக்கொண்டும் 160 நாசகாரிகள் வேலை செய்துகொண்டும் இருக்கின்றன என்று தெரியவருகிறது.

இந்த 160 நாசகாரிகள் வின, பிரிடனுககு அனுப்பியவைகளைப்போன்ற 45 நாசகாரிகளை நூதன யுத்த வழியில் திருத்தி அமைக்க கடல்படை இலாகா ஏற்பாடு செய்து வருகிறது.

இன்று கடற்படைத் தலைவரான ஸ்டார்க் என்பவரை "ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த யுத்தக் கப்பல்களில் சிலவற்றை இன்னமும் பிரிடனுக்கு அனுப்பப் போகிறீர்களா" என்று கேட்டபொழுது அவர் சொன்னதாவது :—

"இப்பொழுது இல்லை. ஆனால், பின்னால் என்ன நடக்கப்போகிறதென்று என்னால் சொல்ல இயலாது. இன்று முதல் ஆறு மாதத்திற்கு அப்பால் நடக்கக் கூடியவைகளைப் பற்றி இப்பொழுதே விதிதங்கள் ஏற்படுத்துவது முடியாத காரியம்."

இன்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டோடு ஒயிட்ஹவுஸ் மாளிகையில் பேசிய வர்களில் கடற்படைத் தலைவரான ஸ்டார்க்கும் ஒருவர்.

அமெரிக்காவின் இரண்டாவது சபையில் (ஸெனெட்டில்) இன்று நை என்பவர், ஐக்கிய நாடுகளின் யுத்தக் கப்பல்கள் தான் பிரிடிஷ் கப்பல்களுக்குத் துணைக் கப்பல்களாகச் செல்லவேண்டுமென்று ஏற்கனவே பிரிடன் கேட்டுக் கொண்டிருக்கிறதென்று அறிவித்தார்.

ஜான்ஸன் சட்டத்தை ஏற்படுத்திய ஹீராம் ஜான்ஸன் என்பவர் ஐக்கிய நாடுகளிலிருந்து பிரிடிஷ் கடற்படைக்கு முடிவில் அநேக நாசகாரிகள் அனுப்பப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறதென்று அறிவிக்கிருர்.

"தளகர்த்தர் நாக்ஸ் தன்னுடைய ஆக்ஷேபனைகளை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் மிஸ்டர் வில்கியின் யோசனைப்படி மேன்மேலும் நாசகாரிகளை அனுப்பவேண்டுமென்றும் நினைக்கிறேன்" என்று அவர் சொன்னுர்.

## ஜெர்மானியர்களின் வருத்தம்.

நேற்றிரவு ஜெர்மனியின் ஒலிபரப்பு நிலயத்தில் விஷய அறிக்கை நடந்து கொண்டு இருக்கும்பொழுது தீடிரென்று நிறுத்திவிட்டு மற்ருெரு விபரம் ஒலிபரப்பப்பட்டது. அதாவது:—

"நம்முடைய விஷய அறிக்கையை மறுபடியும் ஆரம்பிக்குமுன் நாம் ஒரு முக்கியமான சமாசாரத்தைப்பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது. அதாவது, ஐக்கிய நாடுகளின் ஸெனெட் சபையில் சென்ற சில நாட்களாக நம்முடைய கௌரவத்துக்குக் குறைவானதும் சகிக்க முடியாததுமான அநேக வார்த்தைகளை அநேகர் பேசி அமெரிக்கா தேசத்தை ஜெர்மானியர்களுக்கு விரோதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி தூண்டிவிடுகிருர்களென்று சொல்லுகிறேம். மேற்படி ஸெனெட்டில் சொல்லப்படும் மட்டில் இந்த வார்த்தைகள் மிகவும் அபாயகரமானவை. ஆனுல், அவைகளால் நமக்கு ஒரு அபாயமும் நேரிடக் கூடியதல்ல. அவனுடைய கடைசி சொற்பொழிவில் ஹிட்லர் நிகழ்த்திய பிரகாரம், சம்பவிக்கக்கூடிய எல்லா இடையூறுகளையும், ஜெர்மனிக்கு எதிர்முகமாக சண்டை செய்யக்கூடிய எல்லா சேர்மானங்களையும் அவன் எதிர் பார்த்து இருக்கிருன்.

"மேலே சொல்லிய வார்த்தைகளிலிருந்து ஐக்கிய நாடுகளுக்குத்தான் கெடுதல் நேரிடும். வருங்காலத்தில் ஜெர்மனியின் புதிய உலக அமைப்பில் தேசீய பொது உடமைக்கக்ஷியில் சேர்ந்த நாடுகள்தான் கடைசியில் வெற்றியடைவார்களென்று சமுத்திரத்துக்கு அப்பாலிருக்கும் சீமான்கள் அறிந்து கொள்ளுவார்கள்."

## ஹிட்லரைப்பற்றி ஸெனெட் சபையிலுள்ளவர்களின் அபிப்பிராயங்கள்.

ஸெனெட்டில் ஹிட்லரைப்பற்றிச் சொல்லிய அபிப்பிராயங்களில் சிலதுகள் பின்வருமாறு:—

"இந்த ஹிட்லரிடம் நமக்கு நம்பிக்கை கிடையாது. அவனுடைய அடிமைத்தனம் என்கிற கொள்கையை நாம் எதிர்க்கிறேம்." (ஸெனடர் ஆஸ்டின்).

"ஹிட்லர் பர ராஜ்ஜியங்களை அபகரிக்கும் ஒரு கொள்ளைக்காரன். அவனைத் தோற்கடித்துத்தான் அவனுடைய முறைகளை ஒழிக்கவேண்டும்." (ஸெனடர் பார்க்லி).

"ஹிட்லரின் ஆதீனத்தில் அடிமையாயிருப்பதைவிட உயிர்துறப்பது நலம்." (ஸெனடர் கிளாட் பெப்பர்).

# கடல் பலம்.

ஜெனரல் ஸர் ரோஜர் வில்ஸன் ஒரு யுத்த வீரன். 'எந்த தேசம் வெகுதூர தேசங்களில் சண்டைசெய்ய முடியுமோ அந்த தேசமே முடிவில் ஜெயம் பெறுமென்று' தன் அநுபவத்தையொட்டி, அலிகாரில் சமீபத்தில் பேசினார். அது உண்மையே. தூரக்-கிழக்கு நாடுகளிலேற்படக்கூடிய அபாயத்தைத் தடுக்க ஆஸ்திரேலியாவிலிருந்து சைனியங்கள் இந்த யுத்தக்கப்பல்களின் பலத்தால் மலேயாவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்தக் கடல் வலிமையினால் பூலோகத்தின் பல பாகங்களிலிருந்து ஆஸ்திரேலியர்களும், இந்தியர்களும், பிரிடிஷார்களும், மற்றவர்களும் அச்சு நாடுகளின் பயமுறுத்தலுக்கு அஞ்சாது ஒன்று சேர்ந்து, முதற்தரமான ஆயுதங்களும் கொண்டுவரப்பட்டு, ஆபிரிக்காவில் போர் நடத்துகிறார்கள். இந்த பலத்தைக்கொண்டு ஆஸ்திரேலியா மக்கள் கனடாவுக்கு அனுப்பப்பட்டு விமானிகளாகத் தயாரிக்கப்படுகிறார்கள். இதே காரணத்தால் இந்தியாவின் அக்கரை வியாபாரம் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது.

ஆபிரிக்காவிலும், கிரீஸிலும் ஏற்பட்டிருக்கும் வெற்றிகளுக்கு இந்தக் கடல் வலிமையே ஆதாரமாகும். இந்த பலத்தைக்கொண்டு கடல் மார்க்கங்களில் எதிரிகள் போகாமல், நம்முடைய சஞ்சாரம் தடைப்படாமல் பார்த்துக்கொள்ளுகிறோம். ஆனால் கடல் வெளியானது அகண்டமானதால் பகைவர் கப்பல் ஒன்று கூடப் போகாதபடி தடுக்கமுடியாது. சென்ற யுத்தத்தில் ஐந்து தேசங்களுடைய கப்பற்படைசெய்த காரியங்களை இப்பொழுது பிரிடிஷ்படை தனியே நின்று நன்றாய்ச் செய்கிறது. நாஸிகள் தகர்த்துவிட்டதாகச் சொல்லிக் கொள்ளும் கட்டுத்துறைகளிலேயே, குறித்த காலத்திற்குள்ளேயே இருபது புதிய யுத்தக் கப்பல்களும், விமானமேற்றிச் செல்லும் கப்பல்களும் கட்டப்பட்டு, பிரிடிஷ் கப்பற்படை இப்பொழுது வலுத்துவிட்டது. ஆனால், படையெடுக்கப் பயந்துகொண்டு துறைமுகங்களில் ஒளிந்துகொண்டிருக்கும் எதிரிகளின் கப்பல்களில் ஏதாவது ஒன்றிரண்டு ஏதோ ஒரு சமயத்தில் இருட்டிலோ, மூடுபனியிலோ மறைந்துவந்து சிறு நஷ்டத்தையுண்டாக்கத்தான் செய்யும்.

ஆகையால்தான் பூலோகத்திலுள்ள எல்லா கப்பல் மார்க்கங்களிலும், ஒரு கப்பலாவது நஷ்டமாகாதபடி பார்த்துக்கொள்ளுவதாக பிரிடன் ஒரு சமயத்திலாவது பொறுப்பையேற்றுக்கொள்ளவில்லை. அதிலிருந்து பிரிடிஷ் கப்பற்படையும், பிரிடிஷ் வியாபாரக் கப்பற்படையும் செய்யும் அருமையான கைங்கரியத்தை நாம் அவமதிக்கக்கூடாது. பிரிடிஷ் வியாபாரக் கப்பல்கள் ஏராளமாய் இருக்கின்றன. எதிரிகளுக்கு இந்தக் கப்பல்கள் கொஞ்சம்தான் இருந்தும், பிரிடிஷ் கப்பல்களைக் காட்டிலும், எதிரிகளுக்கு மூன்று பங்கு கப்பல்கள் நஷ்டமாய்விட்டன. இது குறைத்துப்போட்ட கணக்கு. ஆனால் பிரிடிஷ் கப்பற்படை பெருமை பாராட்டிக்கொள்ளாது; வீண் வார்த்தைக்குப் பறந்தது ஜெர்மனியே.

பிரிடனுடைய கடல் பலத்தை அடக்கிவிட்டதாக ஜெர்மனி தற்புகழ்ச்சி செய்துகொள்ளுவதோடுகூட, உலகமும் அதை நம்புமென்று நினைக்கிறது. ஆனல் உலகம் நம்பாது. ஒரு வருஷமாக 233 ஜெர்மன் வியாபாரக் கப்பல்கள், நடுநிலை நாட்டுத் துறைமுகங்களில் நத்தைகள் கூடுகள் கட்ட, ஜெர்மனிக்குத் திரும்பிவர முடியாமல் அடைபட்டிருப்பது பிரிடிஷ் கடல் பலத்தினுல்தான். இந்தக் கப்பல்கள் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்தும் அதற்கு உபயோகப்படவில்லை. இதைத் தெரிந்துகொண்டவர்கள் ஜெர்மனியின் பிரதாபப் பிரசாரத்தை நம்ப மாட்டார்கள். இந்தக் கப்பல்கள் ஜெர்மனிக்குத் திரும்பாத காரணமென்ன? பிரிடிஷ் கடல் பலம்தான்.

---

## ருமேனியா ஜெர்மனியால் காப்பாற்றப்பட்ட நாடாக மாறின விவரம்.

## ஸர் ரெஜினுல்ட் ஹோரின் அபிப்பிராயம்.

## பிரிடனுடனிருந்த நேசத்தின் முறிவைப்பற்றி பொது ஜனங்கள் வருத்தம்.

பிப்ரவரி மீ 17உ யன்று டைம்ஸ் பத்திரிகையின் இஸ்டான்பூலிலிருக்கும் நிருபர் தந்திமூலம் அனுப்பிய செய்தி:—

ருமேனியாவிலிருந்து 16-ம் தேதியன்று இங்கு வந்த ஸர் ரெஜினுல்ட் ஹோர் என்னிடம் கீழே விவரிக்கப்பட்டபடி தகவல் கொடுத்தார்.

"ருமேனியாவை விட்டு வந்த பொழுது, ருமேனியாவின் ஜனங்களின் பரிதாப நிலையைப்பற்றி மிகுதியான துக்கத்தை அடைந்தேன். பேருக்கு மட்டுமல்ல, வாஸ்தவமாகவே ருமேனியா இப்பொழுது ஜெர்மனியின் பாதுகாப்பு நாடாக மாறிவிட்டது. தேச முழுவதும் ஜெர்மானியர்கள் ஆதிக்கத்துக்குள்ளாகிவிட்டது. அதிக முக்கியமில்லாத விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளவோ அல்லது நடவடிக்கைகள் நடத்தவோ ருமேனிய அரசாங்கத்துக்கு உரிமை இருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும், இதற்குக்காரணம் இந்த கீழ்தரமான அலுவல்களில் அனுவசியமாக தங்கள் கவலைகளை ஜெர்மானியர்கள் செலுத்தாததுதான். முக்கியம் வாய்ந்த காரியங்களில் ஒவ்வொன்றிலும் ஜெர்மானியர்களின் அதிகாரம்தான் மேலோங்குகிறது.

"ஆகிலும், அக்டோபர் மாதம் மத்தியிலிருந்து ருமேனியாவுடன் ராஜீய சம்பந்தத்தை முறித்துக்கொள்ளுவதற்கு பிரிடிஷ் அரசாங்கத்தாருக்குப் பூரா வாக உரிமையுண்டு. ஆனாலும் சமீபகாலத்தில் ஜெர்மானிய துருப்புகளை ஏராள மாக ருமேனியாவுக்குள் கொண்டுவரும் வரைக்கும் அதை ஒதுக்கி வைத்திருந்தார் கள். யுத்த நடவடிக்கைகளுக்காக ருமேனியாவில் முக்கியமான நிலயங்களை ஜெர்மனி ஏற்படுத்தியபொழுது இதை நிறைவேற்ற அவசியம் ஏற்பட்டது. நாம் வெளியேறிய பிறகு பிரிடிஷ் விமானப்படைகள் தாக்குமோ என்ற பயத்தினால் நாங்கள் ருமேனியாவிலேயே இருக்கவேண்டுமென்று ஜெர்மானியர்கள் அபிப் பிராயப்படுவார்கள்போல் தோன்றிற்று. நம்முடைய தூதுகோஷ்டியும் பாராஜ் ஜிய மந்திரிகளும் ஜெர்மானியர்களால் இடைஞ்சல்கள் நேர்ந்ததென்று வெகுவாக புகார்கள் செய்யாததிலிருந்து இது ருஜுவாகிறது.

"நாம் ருமேனியாவிலிருந்து வெளியேறியதைப்பற்றி ஜெனரல் அண்டோ னெஸ்கு அந்தரங்கமாக வருத்தப்படுகிறாரென்று நினைக்கிறேன். ருமேனிய ஜனங்கள் எல்லோரும் ஒரே மனதாக ஜெர்மானியர்களை வெறுக்கிறார்கள். நாம் வெற்றிபெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறார்கள். இந்த மனப்பான்மை கல்விபெற்ற பிரெஞ்சு உயர்தரப்பார்களுக்கு மட்டுமல்ல, பொதுஜனங்களுக்கும் 'இரும்பு கார்டுகள்' என்று சொல்லக்கூடும் கக்ஷியைச் சேர்ந்தவர்களில் சில வகுப்பாராகிய, டிரான்ஸில்வேனியர்களிடத்திலும் குடிகொண்டிருக்கிறது.

"ருமேனியாவின் தற்கால நிலைமை எப்படி ஏற்பட்டதென்றால், காளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக ஜெர்மானியர்கள் ருமேனியாவுக்குள் புகுந்து 'இரும்பு கார்டுகள்' என்ற கோஷ்டியார் மூலம் அரசாள முதலில் முயன்றார்கள். பிறகு 'இரும்பு கார்டுகள்' வகுப்பாரோடு அண்டோனெஸ்குவைச் சேர்த்தும் கடைசி யாக 'இரும்பு கார்டு'களில்லாமல் ஜெனரல் அண்டோனெஸ்கு மூலமாகவும் அதிகாரம் வகிக்க முயன்றார்கள். ஹிட்லர் உத்தரவு செய்த மாத்திரத்தில் யாதொருவிதமான ரத்த வெள்ளமும், ஏற்படக்கூடாதென்ற ஷரத்துக்குப்பட்டு, ஜெர்மனிக்கு அண்டோனெஸ்கு சமீபகாலத்தில் வந்தபொழுது இந்தக் கடைசி முடிவு ஏற்பட்டது. இது காரணத்துக்காகத்தான், பாஸிக் கக்ஷியைச் சேர்ந்த சிலர்களால் ஆதரிக்கப்பட்டு, சென்ற ஜனவரி மாதத்தில் ருமேனியாவில் ஏற்பட்ட கலகமானது ஹிட்லருடைய உத்தரவை மீறக்கூடாது என்ற பயத்துடன் உடன் காலத்தில் அடக்கப்படவில்லை. ஜெர்மானியர்கள் ஜெனரல் அண்டோனெஸ்குவை ஆதரித்து வருகிறார்கள். ஆனாலும், பின்காலத்தில் அவசியம் ஏற்பட்டால் உபயோகப்படுத்தலாமென்று 'இரும்பு கார்டு' கக்ஷியாரைத் தயாராக ஜெர்மானியர்கள் வைத்திருக்கிறார்கள்.

"ருமேனியாவில் தற்காலமிருக்கும் ஜெர்மானிய துருப்புகளின் சங்கியை 3,00,000 முதல் 4,00,000-க்குள்ளாகவிருக்குமென்று மதிக்கப்படுகிறது. அநேக மாய் துருப்புகளின் சங்கியை அதிகப்படுத்தப்படலாம். இது விஷயத்தில் ருமேனியாவின் அரசாங்கத்தாரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. துருப்புகளை

ருமேனியாவில் சேமிப்பதைப்பற்றி ஜெர்மானிய அறிவிப்பு என்னவென்றால், வேறே ஒரு காரணத்துக்குமல்ல, பாதுகாப்புக்காக மட்டும்தான் உபயோகப் படுத்தப்படுமென்று. ஆனாலும், இதாலியை நிலைகுலைந்து விடும்படி செய்ய சம்மதிக்க மாட்டோமென்று ஜெர்மனி அறிவிக்கிறது. ருமேனிய இருப்புப் பாதைகளெல்லாம் ஜெர்மானியர்கள் கைவசமாகிவிட்டன. ஜனங்களை ஏற்றிச் செல்லும் ரயில் வண்டிகளெல்லாம் சரியானபடி போய்க்கொண்டிருக்கவில்லை. பெட்ரோல் உபயோகத்தை அளவிட்டுக்கொடுக்கப்படுமென்றும் வதந்தி உலாவு கிறது. இம்மாதிரி செய்தால் ரஸ்தாக்களில் பிரயாணம் செய்வதும் கூட தடுமாறிவிடும். ஒவ்வொரு நாளும் உணவுப்பொருள்களின் நிலைமை கெடுதி அடைந்து கொண்டே வருகிறது.''

ருமேனியா இந்தப் பரிதாப நிலையை தடுத்திருக்கக் கூடுமாவென்றும், ஜெர்மனியால் போடப்பட்டிருக்கும் குறவளைப்பிடிப்பு வராதபடி அவர்களிட மிருக்கும் எண்ணெய் கிணறுகளை அழித்து விடுவோமென்று வெருட்டி, ஜெர்மன் ஆதிக்கத்தைத் தடுத்திருக்க முடியாதாவென்றும் நான் கேட்டபொழுது ஸர் ரெஜினல்ட் பதில் சொன்னார் "அப்படி செய்திருக்கக்கூடும். ருமேனியாவில் ஏற்பட்ட சில சம்பவங்கள் நடந்தேதான் தீரும். அவை தடுக்க முடியாதவை. ஆனாலும், மெடாக்ஸாஸ் போன்ற ஒரு ராஜதந்திரர் ருமேனியாவிலிருந்தால் எண்ணெய் கிணறுகளை அழித்து விடுவோமென்ற பயத்தைக் காட்டி அதன் மூல மாக ருமேனியாவுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை நிவர்த்தி செய்திருக்கலாம். அதமபக்ஷமாக ருமேனியாவின் சுதந்திரத்தையும் சுய மரியாதையையும் அது நிலை நாட்டிக்கொண்டிருக்கலாம்''.

---

# மூர்க்கத்தனத்தைப்பற்றி எழுத்து மூலமுள்ள முத்திரைகள். நாஸிகளின் மந்திரியின் வெளியீடு.

"அடிமைத்தனத்தை ஏற்பாடு செய்ய விரும்புகிறோம்." 1940-ம் வருஷம் மே மீ ஆரம்பத்தில் நாஸிகக்ஷியைச் சேர்ந்தவர்களில் பெரிய உத்தியோகஸ்தர்கள் முன்னிலையில் சொற்பொழிவு நிகழ்த்திய காலத்தில் உலகத்தில் நாஸிகள் எப்படி நடந்து கொள்ளப்போகிறார்கள் என்பதைப்பற்றி ஜெர்மானிய விவசாய இலாகா மந்திரியான டாரே என்பவர் ஸ்பஷ்டமாகவும் பகிரங்கமாவும் பிரசங்கம் செய்தார். அதில் "அடிமை" என்னும் வார்த்தையை, ஒரு நீதிக்கதையில் சொல்லக்கூடியது அல்லது அலங்காரமாக உபயோகப்படுத்தக்கூடிய ஒரு பதமென்று பொருள் படுத்தவேண்டாம்" என்று சொன்னார். "எங்களுடைய திட்டத்தில் மத்திய காலத்தில் அனுஷ்டானத்திலிருந்த அடிமைத்தனத்தை நவீன முறையில் ஏற்பாடு செய்வோம். நாங்கள் அம்மாதிரி செய்யவேண்டிய அவசியமிருக்கிறது. அவசியமாகவும் ஏற்பாடு செய்வோம். ஏனென்றால், எங்களுடைய தீர்க்கமான வேலைகளைப் பூர்த்திசெய்ய இது அவசரமான தேவையாயிருக்கிறது" என்றும் சொன்னார்.

டாரேயின் சொற்பொழிவை 1940-ம் வருஷம் டிஸம்பர் மீ 9-ம் தேதியில் லைப் என்னும் அமெரிக்கப்பத்திரிகையில் வெளியிட்டிருந்தார்கள். நாஸிகள் மேலே சொல்லிய அபிப்பிராயத்தை வெளிவராமல் அமுக்கிவிட மிகுந்த பிரயத்தனம் செய்தார்கள். அந்தப் பத்திரிகையில், "இந்தக் கட்டுரையானது பத்திரிகைக்கு வேண்டிய சமாசாரத்தை சேமிப்பதற்காக உபயோக முள்ளது மட்டுமல்ல, இது மிகவும் முக்கியமானது" என்று வெளியிட்டிருந்தது. "நாஸி அரசாங்கத்தில் மேலான உத்தியோகங்களிலமர்ந்திருக்கும் அங்கத்தினர்களால் இப்பொழுது வெளியிடப்பட்டுவரும் கொள்கைகளுக்கு இது ஒரு அரிய உதாரணமாகும்."

டாரேயின் அபிப்பிராயப்படி ஜெர்மனியின் 'வாசஸ்தலத்தின் அமைப்பு' என்பது ருஷ்யா நீங்கலாக இரண்டு கண்டங்களுள்ளது. இவைகளை 1940-ம் வருஷம் இலையுதிர் காலத்திற்குள் கைப்பற்றி விடவேண்டியது. இந்தக் கண்டங்களில் புதிய முறைகளை ஏற்பாடு செய்யவேண்டும். ஜெர்மானிய வகுப்பைச் சேர்ந்தவர் களல்லாத எல்லா குடிகளுடைய பூஸ்திதியையும் கைத்தொழிற்சாலைகளையும் விலக்கன்னியில் பறிமுதல் செய்து, நாஸிக் கக்ஷியில் சேர்ந்த பிரமுகர்களுக்கும் இந்த யுத்தத்தில் தீரத்துக்காக பட்டப்பரிசுகள் பெற்ற துருப்புகளுக்கும் விநியோகம் செய்யப்படும்."

"இம்மாதிரியாக ஜெர்மானிய எஜமான்களடங்கிய ஒரு பிரபுக்கள் கோஷ்டி ஸ்தாபிக்கப்படும். இந்த பிரபுக்கள் கோஷ்டிக்கு அடிமை வேலைக்காரர்கள் நியமிக்கப்படும். இந்த அடிமைகள் பிரபுக்களின் சொந்த சொத்தாக ஆகி விடுவார்கள். ஜெர்மானியரல்லாதவர்களின் தொகுதியைச் சேர்ந்தவர்கள் இந்த வேலையில் அமர்த்தப்படுவார்கள்."

### ஜெர்மானியரல்லாதவர்களுக்குப் படிப்பு இல்லே.

டாரே மேலும் அறிவிக்கிறர் "இந்த அடிமைகளுக்கு படிப்பு இல்லாத்தன்மையின் பூராப் பிரயோஜனத்தையும் நாங்கள் அளிக்கப்போகிறோம். இனிமேல், உயர்தரக் கல்வியானது ஐரோப்பாவிலுள்ள ஜெர்மானிய ஜன ஸமூகத்துக்கு மட்டும் தான் புகட்டப்படும்..........அதிகாரம் செலுத்தக்கூடியவும், நெருக்கடி ஏற்பட்டால் ஈவு இறக்கமன்னியில் பலத்தை உபயோகிக்க தைரியம் வாய்ந்த ஜெர்மானிய பிரபுக்கள் தான், உலகத்தை அரசாளப்போகும் ஜெர்மனியின் ஆக்ஷிக்கு முக்கியமான ஆதரவுகளாயிருப்பார்கள்."

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

---

### ஹிட்லரின் வியாக்யானங்கள்,

புது ஆயுதமொன்றைக் கண்டு பிடித்து, ரகஸ்யமாய் வைத்திருப்பதாயும், அதைப் பிரயோகித்து, யுத்தத்தைச் சென்ற கிறிஸ்துமஸ் பண்டிகையோடு முடித்துவிடப்போவதாகச் சொன்ன பேச்சும், ஆகஸ்டு மாதத்தில் பிரிடனுக்கு வந்து, பக்கிங்ஹாம் அரண்மனையில் உட்காருவதாகச் சொன்னதும், லண்டன் துவம்ஸமாய் விடுமென்று ரேடியோ மூலம் இரண்டு முறை செய்த சப்தமும், பிரிடனுக்கிருக்கும் க்ரூய்ஸர் கப்பல்களுக் கதிகமாகவே உடைத்து விட்டதாகச் சொல்லிக்கொண்டதும், எல்லாம் வீணாயின. இப்பொழுது இந்த வீண்பேச்செல்லாம் நின்றுபோய் ஐரோப்பிய கண்டத்தில் பிரிடன் எங்கேயாவது வந்து இறங்கினல் தான் எதிர்க்கபோவதாக ஜெர்மனி சொல்லுகிறது. பிரிடனே படையெடுக்க முடியவில்லே. இதை மறைப்பதற்காக, எங்கேயோ தூர தேசத்தில் (ஆபிரிக்காவில்) பிரிடன் வெற்றியையடைந்து வருகிறது. அங்கு ஓடிச்சென்று அதை இனிப் பிடிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறது. அதெல்லாம் வேண்டாம். பிரிடனிலேயே 40 லக்ஷம் சைனியங்களும், அதோடு, விமானப் படையும் கப்பற்படையும், நிற்கின்றன. முடிந்தால் எதிர்க்கட்டும். இது முடியாததினுல்தான் ஜெர்மானியர் இப்பொழுது பால்கனுக்கும், ஸிஸிலிக்கும் ஓடி ஏதாவது வெற்றி கிடைக்காதாவென்று பார்க்கிறார்கள்.

## பழைய பொய்.

பதினாயிரக் கணக்கான விமானங்களைக் கொண்டும், 300, 400 நீர்மூழ்கிகளைக் கொண்டும் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும், பிரிடன், ஐஸ்லாண்ட், ஜிப்ரால்டர், கிரீஸ், ஆபிரிக்காவிலுள்ள பிரிடிஷ் பிரதேசங்கள் முதலியவைகளை இதுவரையில் கேட்காத உக்கிரகத்தோடு தாக்கப்போவதாக பயங்கரமாக வர்ணித்து, இந்தப் படையெடுப்பைத் தடுக்க வழிதெரியாது பிரிடன் திகைப்பதாக அமெரிக்கப் பத்திரிகைகள் எழுதுவதாக ஜெர்மனி பிப்ரவரி 28-ம் தேதி ஒலி பரப்பிற்று.

இந்த அரட்டலுக்குப் பயப்படப்போவதில்லை. ஜெர்மனி நூற்றுக்கணக்கான விமானங்களைக்கொண்டு ஆறுமாதம் படையெடுத்தும் பிரிடனில் தைரியம் குறையவில்லை, கைத்தொழில்களும் குறையவில்லை. பிரிடிஷ் விமானமொன்றுக்கு ஜெர்மன் விமானம் மூன்று வீதம் உடைக்கப்பட்டு எதிரிக்கு 3,000 விமானங்கள் சேதமாய் விட்டன. பதினெட்டு மாதங்களாக ஜெர்மன் நீர்மூழ்கிகள் எதிர்த்தும் ஏழு வியாபாரக் கப்பல்களுக்கு ஒரு கப்பல்தான் சேதமாயிருக்கிறது. இவைகளுக்குப் பதிலாக புதுக் கப்பல்கள் வாங்கியும், கட்டியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஜெர்மன் பிரசாரம் பொதுவாகவே உண்மையற்றதாதலால் அமெரிக்க பத்திரிகைகள் சொன்னதாகச் சொல்லுவதும் பொய்யாகத் தானிருக்கவேண்டும். ஆனால் அமெரிக்கர்களுடைய வாஸ்தவமான அபிப்பிராயம், புருக்லின் ஈகிள் பத்திரிகைக்கு ஸினிமா வியாக்யானம் எழுதும் நிருபர் க்வெண்டின் ரெயினால்ட்ஸ் சொல்லுவதிலிருந்து தெரியும். ஹிட்லர் படையெடுப்பை பிரிடிஷார்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். வருவதாக அரட்டுவதைத் தவிர வரக்காணோம். எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரத்தில் ஜெர்மனி படையெடுக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பிரிடனும் சீக்கிரம் வெற்றியடைந்து விடும்.

## பிரிடிஷ் சேனாபதிகளுக்குள் மனஸ்தாபமாம்.

லிபியாவில் இனி நடக்கவேண்டிய படையெடுப்பைப்பற்றி ஜெனரல் வேவலுக்கும், ஜெனரல் வில்ஸனுக்குமுள்ள தகராறைத் தீர்த்துவைக்க மிஸ்டர் ஈடன் கெய்ரோவுக்குப் போயிருப்பதாக இதாலி பிப்ரவரி 24-ல் ஒலிபரப்பிற்று.

எகிப்பது, துருக்கி, கிரீஸ் தேசங்களுக்கு மிஸ்டர் ஈடன் போயிருக்கும் காரியத்தைத் தெரிந்துகொள்ள இதாலி ஆசைப்படுவது சகஜம்தான். ரகஸ்யம் வெளிவராது. ஆனால் ஒன்று நிச்சயம். பிரிடிஷ் சேனாபதிகளுக்குள் தகராறு கிடையாது. ஜெனரல் வில்ஸன் ஒத்துழைத்ததைப்பற்றி ஜெனரல் வேவல் தந்தி மூலமாய் தெரிவிக்க, அதை மிஸ்டர் சர்ச்சில் பார்லிமெண்ட் சபையில் பிரஸ்தாபித்திருக்கிறார்.

## உள்ளது வெளிவந்து விட்டது.

பிப்ரவரி 13-ம் தேதி யன்று அஸோர்ஸ் தீவுக்கப்பால் துணையோடு சென்ற பிரிடிஷ் கப்பல்களில் எட்டுக் கப்பல்கள் கவிழ்க்கப்பட்டதை பிரிடன் மறைக்கிறதென்று ஜெர்மன் ரேடியோ மார்ச்சு 2-ம் தேதி சொல்லிற்று. எட்டுக் கப்பல்கள் தான் நஷ்டமென்றால் ஏற்கனவே பதின்மூன்று கப்பல்கள் சேதமானதாகச் சொல்லுவானேன். சில கப்பல்கள் திரும்பிவரக் காலமிருப்பதால் பிரிடன் இதைப்பற்றி முடிவான கணக்கை இன்னும் கொடுக்கவில்லை.

---

# B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு

## பிரிடன் போர் செய்வதின் காரணம்.

தன் வியாபாரத்தைக் காத்துக்கொள்ளுவதற்காக பிரிடன் சண்டை செய்கிறதென்று ஒரு அமெரிக்க சட்டசபை அங்கத்தினர் சொன்னதாக பிப்ரவரி 25-ல் இந்துஸ்தானியில் ஜெர்மனி ஒலிபரப்பிற்று. ஜெர்மானியர்கள் தங்களுக்கேற்றபடி வியாக்கியானம் செய்து எதையும் மாற்றிவிடுவார்கள். ஆனால், பிரிடனுடைய பிரதம மந்திரி யுத்த நோக்கத்தைப்பற்றிச் சொன்னதைக் கவனிப்போம். தூரக்-கிழக்குப் பிராந்தியத்திலும், மற்ற உலகத்தில் எந்தப் பிராந்தியத்திலும் மத்தியஸ்தம் பேசத் தயாராயிருப்பதாக ஜப்பான் அயல் நாட்டு மந்திரி சொன்னதற்கு காமன்ஸ் சபையில் மிஸ்டர் பட்லர் பதில் கொடுக்கும்போது, மிஸ்டர் சர்ச்சிலுடைய கீழ்கண்ட வாக்கியத்தை எடுத்துரைத்தார். அதாவது: பிரிடன் யுத்தத்திலிறங்கியிருப்பது, ராஜ்ஜியங்களைச் சேர்ப்பதற்கும், வியாபாரத்துக்கும், பொருளுக்காகவுமில்லை. மனிதவர்க்கத்தின் எதிர்கால க்ஷேமத்துக்காகத்தான்: ஆகவே இது விஷயத்தில் ராஜியென்பதில்லை; சமாதானமும் கிடையாது.

## பொருளாதாரத்தில் ஜெர்மனி வெற்றியடைந்து விட்டதாம்.

இதாலிக்கும் ஜெர்மனிக்கும் நடக்கும் வியாபார பேச்சுகளிலிருந்து அச்சு நாடுகளுக்குப் பொருளாதார வெற்றி வந்துவிட்டதாக ஜெர்மனி பிப்ரவரி 27-ம் தேதி ஒலிபரப்பிச் சொல்லுவதாக டியூடஸ் ஆல்கிமேயின் ஸிடங் என்ற நாஸி பத்திரிகை எழுதுகிறது. இந்த ஜெர்மன் வெற்றியிலிருந்து இதாலிக்கு நஷ்டம் வரப்போகிறது இனித்தெரியும். ஜெர்மனியோடு சேர்ந்தவருடைய கதியானது எப்பொழுதும் இதுவே. சென்ற வருஷம் ருமேனியா இறைச்சியையும், கோதுமையையும் ஏராளமாக ஏற்றுமதி செய்தது; இந்த வருஷம் தனக்கே வாரத்தில் நான்கு நாட்களுக்கு இறைச்சியில்லாது, அதற்குச் சாப்பிட கருப்பு ரொட்டிதான் கிடைக்கிறது. தன் சரக்குகளை ஜெர்மனிக்குத் தவிர மற்றெவருக்கும் விற்க முடியாது. எட்டுமாத காலமாக பிடிபட்டிருப்பதிலிருந்து டென்மார்க் 200 லக்ஷம் பவுன் ஜெர்மனிக்குக் கடன் கொடுத்திருக்கிறது. பதிலாக, ஜெர்மனியிடமிருந்து ஏதாவது சரக்குகள் வாங்கிக்கொள்ளலாம். ஆனால், ஜெர்மனிக்கு விற்கத்தான் சரக்கில்லை.

## பிரிடன் செய்த உதவிக்கு கிரீஸ் நன்றி பாராட்டுகிறது.

கிரீஸானது வெறுமென்றே பிரிடிஷ் உதவியை நிராகரிப்பதாக அஸோஸியேடட் பிரெஸினுடைய லண்டன் நிருபர் சொல்லுவதாக ஜெர்மனி பிப்ரவரி 27-ல் ஒலிபரப்பிற்று. ஆனால், உண்மையில், எஸ்டியா என்ற கிரேக்கப் பத்திரிகை, பிரிடிஷ் உதவியைப்பாராட்டி, 'கிரீஸுக்குப் பிரிடன் செய்த உதவியை இதாலியர்கள் மறக்கமாட்டார்கள். எனென்றால், பிரிடிஷ் ராணுவங்களால், டாரன்டோ, ஸிஸிலி, டோடெகானீஸ், அல்பேனியா முதலியவிடங்களில் இதாலியர்கள் பலமாய் அடிபட்டது அவர்களுக்குத்தான் தெரியும்' என்று பரிகாசமாய் எழுதியிருக்கிறது.

# முக்கியமான விளம்பரம்.

## யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஈ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில்யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றுண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங்களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷயங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற்படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறுர்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனுல், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களை அறுபது இடங்களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்னவென்றுல் :—

(a) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத்** துவக்கப்படும்.

(b) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

**அந்த இடத்தில் கூடுங்கள்,**

**சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.**

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXXV.

| 1941— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| மார்ச்சு | 15, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 16, ஞாயிற்றுக்கிழமை. | அன்னவாசல் | ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |
| | 17, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | கீர்ப்பழனி | ... | மாலை | 6.00 |
| | | ஆவூர் | ... | ,, | 6.30 |
| | 18, செவ்வாய்க்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் | ... | ,, | 6.30 |
| | 19, புதன்கிழமை ... | குழிபிறை | ... | ,, | 6.00 |
| | | சுந்தரம் | ... | ,, | 6.30 |
| | 20, வியாழக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 6.00 |
| | | ராயவரம் | ... | ,, | 6.30 |
| | 21, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | மதகம் | ... | மாலை | 6.00 |
| | | ஏம்பல் | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் XXXVI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 22, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 23, ஞாயிற்றுக்கிழமை. | கோட்டைக்காடு | ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி | ... | ,, | 6.30 |
| | 24, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | நார்த்தாமலை | ... | மாலை | 6.00 |
| | | தாயினிப்பட்டி | ... | ,, | 6.30 |
| | 25, செவ்வாய்க்கிழமை. | செம்மட்டிவிடுதி | ... | ,, | 6.00 |
| | | மழையூர் | ... | ,, | 6.30 |
| | 26, புதன்கிழமை ... | சேரி பள்ளிக்கூடம் | ... | ,, | 5.30 |
| | | கொன்னையூர் | ... | ,, | 6.00 |
| | | வேகுபட்டி | ... | ,, | 6.30 |
| | 27, வியாழக்கிழமை ... | கிள்ளனூர் | ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... | ,, | 6.30 |
| | 28, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | காரையூர் | ... | மாலை | 6.00 |
| | | கீழத்தானியம் | ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

# அதிர்ஷ்டச் சீட்டு.

(ஶ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர்டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

## இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

## முடிவு தேதி 15—6—41

## சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

## 300 பரிசுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது பரிசு | ரூபாய் | 7,500 | |
| 2-வது பரிசு | ,, | 5,000 | |
| 3-வது பரிசு | ,, | 2,500 | |
| 2 பரிசுகள் | ,, | 1,000 | வீதம் |
| 5 ,, | ,, | 500 | ,, |
| 90 ,, | ,, | 100 | ,, |
| 100 ,, | ,, | 50 | ,, |
| 100 ,, | ,, | 15 | ,, |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—15-3-41.